
ஆரம்பம் 1969 பெப்ரவரி

## பொன்விழா சிறப்பு மலர்

நவம்பர் 2019

அறிவோம்.. அறிவிப்போம்...




ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 51 இதழ் - 10

நவம்பர் - 2019

ஆசிரியர் :

■ அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே...


| | |
|---|---|
| நூற்றாண்டை நோக்கி | 02 |
| ஆசிச் செய்தி | 02-07 |
| அகவை ஐம்பது | 08 |
| ஊடகம் ஓர் அழிவு சக்தி அல்ல | 09 |
| வாடா மலருக்கொரு | 12 |
| தலை குனிந்து என்னை | 13 |
| ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் | 15 |
| 15வது இயக்குனராக | 17 |
| மௌனம் ஒரு மகா சக்தி | 19 |
| இதுவரை 3 | 20 |
| குறைவின்றி வாழ்க நீடே! | 21 |
| வாசிப்பில் வளர | 22 |
| என்னங்க | 24 |
| Hello நான் தொண்டன் | 25 |
| பொன்விழா வாழ்த்து | 26 |
| கடுகுக் கதை | 27 |
| ஏதோ சொல்லணும்னு | 28 |
| மனித உணர்வுகளின் | 29 |
| தெரிவு செய்யுங்கள் | 30 |
| சிறியது ... அழகானது | 32 |
| போட்டி முடிவுகள் | 34 |
| வினாவிடைப் போட்டி | 35 |
| திருவிவிலியம் கற்போம் | 36 |
| நன்றி நவிலல் | 40 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=
(தபாற் செலவு உட்பட)



# அன்புடன் உங்களோடு ...



நூற்றாண்டை நோக்கி ....

'பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்
கட்டி இழுத்து கால் கை முறித்து
அங்கம் பிளந்து, இழந்து துடித்திடினும்
பேச மறவேன் தமிழை'

என்று மொழிக்கு பெருமை சேர்த்த நம் முன்னோரின் உணர்வினைப் புரிந்து, மொழியின் சிறப்பினை ஆவணப் படுத்தி அரை நூற்றாண்டைக் கடக்கிறான் 'தொண்டன்'. வரவேற்றதால் வயது கடந்து போகிறது - வாழ்த்துகிறேன் உன்னை.

சிறந்த கல்விமானாகிய ஆயருக்கு ஒரு ஆசை. ஆசையை நிறைவேற்ற ஆரம்பித்தார் ஒரு பத்திரிகையை. சிறிய அளவில் சிந்தனை கொடுத்தாலும் நாளுக்கு நாள் அதனை வளர்க்க மறக்கவில்லை. பயனடைவார்கள் என்று நீங்கள் நினைத்ததால் புகழ்ந்து பாராட்டுகின்றோம் இன்று பலரும் உங்களை.

நிர்வாகச் சிக்கலைப் பார்த்தான்....
நிதித் தேவையை உணர்ந்தான்....
பின்னடைவைச் சந்தித்தான்....
சமூகத்தின் தேவையை உணர்ந்தான்....
போட்டி போட்டு முன்னேற நினைத்தான் ....
கிடைத்தது வழிவந்த ஆயர்களின் ஆசி.
பலரும் கரம் கொடுத்தார்கள், தன்நம்பிக்கையை வளர்த்தார்கள்.
தடைகளைத் தாண்டி தலை நிமிர்ந்தான்
அரைச் சதத்தைக் கடந்து தமிழ் பேசும் மக்களின் சொத்தாக மாறினான் - "தொண்டன்".

இவன் இறைவார்த்தையை விதைக்கிறவன்....
தமிழுக்குப் பெருமை சேர்க்கிறவன்.....
சிந்தனையால் மனதைத் தொடுகிறவன்....
மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறவன்.....
சிற்பிகளைச் செதுக்குகிறவன்.....
அதனால் வளர்ச்சியடைந்து நடைபோடுகிறான்.
கிழக்கின் "தொண்டனே" மகுடம் சூட்டி மனதார வாழ்த்துகின்றேன் உன்னை.

பொன்விழாக் கொண்டாடும் தொண்டனோடு பயணிக்கின்ற மதிப்புக்குரிய மறைமாநில ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, குருக்கள், துறவிகள், 'தொண்டன் குடும்பம்', எழுத்தாளர்கள், வாசகர்கள், விற்பனை யாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றேன்.

இன்னும் அதிகமாய்த் தொண்டாற்றி சற்றும் தளராமல் வைரவிழா வரைச் சென்று, பவழ விழாவில் கால்பதித்து, நூற்றாண்டைத் தொண்டன் தொட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

- ஆசிரியர் -



"ஆண்டவருடைய கண்கள் எங்கும் நோக்கும்;
நல்லாரையும் பார்க்கும், பொல்லாரையும் பார்க்கும்" நீதிமொழி 15:3

# ஆசிச்செய்தி



**தொண்டனுக்கு வயது 50 :**

"தொண்டன்" கத்தோலிக்க மாத ஏட்டுக்கு இன்று 50ஆவது ஆண்டு விழா. 1969ம் ஆண்டு தொடங்கப்பட்டு எவ்வித தடங்கலுமின்றி தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் குறைந்த பக்கங்களோடும் குறைந்த விலையிலும் விற்கப்பட்டு வந்த தொண்டன் மாத ஏடு பத்திரிகையாக வெளியிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தது. நற்செய்தியை "அறிவோம், அறிவிப்போம்" என்பதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை வாசகர் வட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் சமய சமூக இலக்கிய வெளியீடாக மாற்றப்பட்டு, காலத்தின் தேவைக்கேற்ப கணினி வடிவமைக்கப்பட்டு பலரையும் கவரக்கூடிய கட்டுரைகளையும், செய்திகளையும், ஆக்கங்களையும் உட்கொண்டதாக வெளிவருவதையிட்டு பெருமைப்படுகின்றோம். ஆரம்பத்தில் பொதுநிலையினரை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொண்டன், படிப்படியாக அருட்தந்தையர்களை ஆசிரியர்களாகக் கொண்ட நிர்வாக அமைப்பாக மாற்றப்பட்டது. பல புதிய எழுத்தாளர்களும் நலன் விரும்பிகளும் உள்வாங்கப்பட்டனர்.

தொண்டன் சஞ்சிகை மட்டக்களப்பு மறைமாவட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் பலவாயினும் அடிப்படையான நோக்கம் நற்செய்தியை அறிவதும் அறிவிப்பதுமாகும். பொன்விழா கொண்டாடும் இத்தருணத்தில் இதற்குப் பொறுப்பானவர்களிடம் நாம் ஆர்வத்துடன் கேட்கும் வினா எதுவெனில், "எவ்வளவு தூரத்திற்கு இச் சஞ்சிகையின் நோக்கம் நிறைவேறியுள்ளது என்ற ஒரு ஆய்வை நடத்திவிட்டீர்களா? அல்லது அதைப்பற்றி இன்னும் சிந்திக்கவேயில்லையா? எந்த உருவத்தில் அல்லது எந்த வடிவத்தில் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது? வாசகர் வட்டத்தில் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றதா? இச் சஞ்சிகை மூலம் நற்செய்தி அறிவிப்பை எந்தெந்த வழிகளில் முன்னெடுத்துச் செல்கிறீர்கள்? கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், ஆய்வுகள் வழி நோக்கம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதா? புதிய எழுத்தாளர்கள் உள்வாங்கப்படுகின்றார்களா? குறுகிய வட்டத்துக்குள் நிற்காமல் எண்ணங்கள் பிற மதங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களும் உள்வாங்கப்பட்டு அவர்களது ஆக்கங்களும் உள்வாங்கப்படுகின்றனவா?" பொன்விழாக் கொண்டாடும் தொண்டன் சஞ்சிகையின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள அனைவரும் மேற்கூறப்பட்ட ஆய்வு ஒன்றினை நடாத்தி இதனை ஆக்க சக்தி நிறைந்த ஊடகமாக மாற்றிட ஆவன செய்ய வேண்டுமென்பதே அடியேனின் கனவாகும். இக்கனவு நனவாக இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

● **பேரருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.



# ஆசிச்செய்தி

## ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாக் கொண்டாடும் "தொண்டன்" சஞ்சிகை

தொண்டனின் தொடக்க காலங்களை நோக்கும்போது, 1969ம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, முன்னாள் ஆயர் இக்னேசியஸ் கிளெனி (இ.ச.) அவர்களும், துணை ஆயராய் இருந்த ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களும் தொண்டன் சஞ்சிகைக்கு தக்க ஆலோசனையும் வழிநடத்தலையும் கொடுத்துள்ளார்கள் என்று அறிகிறோம். இதற்கு முதலாவது ஆசிரியராக திரு எஸ். அந்தோனிப்பிள்ளை பணியாற்றி உள்ளார் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

மனித உள்ளங்களோடு நெருங்கிய தொடர்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும் வழிமுறைகளையும் மிக எளிதாக மக்களிடையே பரப்பக்கூடிய புதிய வழிகளைக் காட்டுவதற்கான வெளிப்பாடுகளை அன்னையாம் திருஅவை ஏற்று மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறது. தனிமனிதரை மட்டுமல்ல, மனித சமூகங்களையும், மனிதகுலம் முழுவதையும் இயல்பாக சென்றடைந்து இயக்கவல்ல கருவிகள், குறிப்பாக அச்சக வெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி இவைகளை சமூகத் தொடர்பு சாதனங்களாகக் குறிப்பிடலாம்.

1983ம் ஆண்டில் நாம் ஆயராக நியமனம் பெற்ற பின்னர், வத்திக்கான் சங்கப் படிப்பினையின்படி சமூகத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல் சமூக வளர்ச்சிக்குத் தேவை எனக் கண்டு அதற்கு முன்னுரிமை கொடுக்க விரும்பினேன். "சமூகத் தொடர்புச் சாதனங்கள் (கருவிகள்) எனக்கூறும் அச்சுவெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி முதலிய கருவிகளைப் பொருத்தமுடையவை என அழைக்கலாம்." (சங்க ஏடு: இல. 2, சமூகத் தொடர்புக் கருவிகள்.)

இதற்குப் பொறுப்பாக யாரை நியமிக்கலாம் என்று தேடியபோது அருட்பணி. C. P. இராஜேந்திரம் (இ.ச.) அவர்களைச் சந்தித்தேன். என்னுடைய தேவையை அவரிடம் தெரிவித்தபொழுது அவர் தானும் அப்பேற்பட்ட பணியைப் பற்றி சிந்திக்கிறேன் என்று சொல்லித் "தொண்டன்" பத்திரிகையைப் பொறுப்பேற்றார். மேலும் அவர் அமெரிக்காவிலுள்ள பல்கலைக் கழகத்தில் சமூகத் தொடர்பு சாதனங்களைப் பற்றிய அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தார் என்று அறிந்தேன். அத்துடன் அவர் ஒலிப்பதிவு செய்யும் கூடம் (Recording Studio) ஒன்றும் உருவாக்க வேண்டும் என்று பேராவல்

கொண்டிருந்தார். எனவே எனது கனவு நிறைவேற வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். இன்னும் மேலாக எமது மறைமாவட்டத்தில் மறையாசிரியராக உருவாக்கம் பெற்றுத் திறம்பட பணிபுரிந்த திரு. எஸ். யேசுதாசன் - 'மலர்வேந்தன்' - கொழும்பில் கத்தோலிக்க ஒலிபரப்பு நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆடி மாதம் இனக் கலவரம் தொடங்கியதும் கொழும்பில் இருப்பது ஆபத்தானதால் உயிர்தப்பி மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்பினார். எனவே அவர் மீண்டும் கொழும்பு திரும்புவது சாத்தியம் இல்லையென்றும் எமது மறைமாவட்டத்திற்கு அவரது சேவை தேவை என்றும் கூறி அவரை அருட்பணி. C. P. இராஜேந்திரம் (இ.ச.) அடிகளாருக்குத் துணை ஆசிரியராக தொண்டன் சஞ்சிகைக்கும் ஒலிப்பதிவுக் கூடத்திற்கும் அவர் நியமிக்கப்பட்டார். இது எமக்குக் கிடைத்த அளப்பரிய வாய்ப்பாக இருந்து வந்துள்ளது. இவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தொடர்ந்து வந்த ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் மூலமாக மாபெரும் வளர்ச்சி பெற்று, இன்றுவரையும் மக்களுக்கு வாசிக்க நல்ல ஆக்கங்களையும் கொண்டு பர்ணமிப்பதாகக் காணும் பொழுது பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் தற்போது சமூகத் தொடர்பு நிலையத்தின் இயக்குனர் அருட்பணி. R. பயஸ் பிரசன்னா அவர்களையும், அவரது குழுவினரையும் வாயார வாழ்த்துகின்றேன். இம்மேலான பொன்விழா நாளில் தொடர்ந்தும் "தொண்டன்" மேன்மைகளை அடைய இறை ஆசீருடன்கூடிய நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**● பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**

ஓய்வுபெற்ற முன்னாள் திருமலை ஆயர்.

# ஆசிச்செய்தி



50 வருட நிறைவில் விழா எடுக்கும் "தொண்டன்" கத்தோலிக்க சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1969ல் தொடங்கப்பட்ட தொண்டன் வெளியீடு பல இயக்குனர்கள், ஆயர்கள், மலர்க்குழு அங்கத்தவர்கள், எழுத்தாளர்களின் அர்ப்பணம் நிறைந்த பணியின் மூலமாக கடந்த 50 வருடங்களாக மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் "தொண்டன்" கத்தோலிக்க சஞ்சிகை பல வடிவங்களைப் பெற்றிருந்தது.

சமய-சமூக-இலக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக வெளிவரும் இந்த சஞ்சிகை கத்தோலிக்கரை மட்டுமல்ல பல்சமய, சமூக இலயக்கியத் துறையில் ஆர்வமுள்ள கிறிஸ்தவரல்லாதவரையும் கவர்ந்துள்ளது. மட்டக்களப்பில் 50 வருடங்களாக இதுபோன்ற சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவந்ததில்லை. எனவே, இது கத்தோலிக்க மற்றும் அனைத்து சமூகங்களுக்கும் பெரும் ஆசீராக அமைந்துள்ளது.

சமகால நிகழ்வுகளின் பின்னணியில் பல ஆக்கங்களை தொண்டன் தாங்கி வருவது இதன் சிறப்பம்சமாக நான் கருதுகிறேன். சமய, சமூக, அரசியல், மருத்துவம், சுற்றாடல் தொடர்புள்ள பல செய்திகளை நாம் தினமும் ஊடகங்கள் மூலமாக அறிகின்றோம். இவைபற்றிய மேலதிக விபரங்களையும் ஆழமான கருத்தாடல்களையும் தொண்டன் உரிய காலத்தில் தருவது இதன் சிறப்பம்சமாகும்.

மட்டக்களப்பில் சமூகத் தொடர்பாடல் ஆணைக்குழு பல பணிகளின் மத்தியில் தொண்டன் சஞ்சிகை வெளியீட்டிற்கு முன்னுரிமை கொடுத்து அதன்மூலம் சமூகத்திற்கு பணிசெய்து வருகின்றது. தொண்டனின் வளர்ச்சிக்காக பணியாற்றிய இயக்குனர்கள், பணியாளர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீண்ட ஆய்வுக் கட்டுரைகளுக்கு வரவேற்பில்லாத காலமிது. குறுஞ்செய்திகளை விரும்பும் சமூகமிது. இச்சவாலை எதிர்கொண்டு பல்வகை மனிதரையும் கவருமளவிற்கு தொண்டன் சஞ்சிகை செயல்பட்டு வருகின்றது. இதற்கு காலத்தின் தேவையறிந்து செயல்பட்டவர்கள் இவர்கள்.

தற்போது இப்பணியைப் பொறுப்பேற்று செயல்பட்டு வரும் இயக்குனர் அருட்பணி பயஸ் பிரசன்னா அடிகளாரையும், தொண்டன் மலர்க்குழு அங்கத்தவர்களையும் நான் பெரிதும் பாராட்டு கின்றேன். தொண்டன் சஞ்சிகையின் பணி தொடரவேண்டும், சமூகத்திற்கு நற்சிந்தனைகளையும் செயலில் மாற்றங்களையும் கொண்டுவர வேண்டுமென ஆசித்து இறைவனை வேண்டுகின்றேன்.

● **பேரருட்திரு. நோயல் இம்மானுவேல் ஆண்டகை**

திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

# ஆசிச்செய்தி



1969ம் ஆண்டிலிருந்து தொண்டு செய்து வந்த "தொண்டன்" ஐம்பது ஆண்டுகளில் காலடியெடுத்து வைத்து பொன் விழாவைக் கொண்டாடுகிறது என்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். சில சில வெளியீடுகள் 'புத்தீசல்' போல வெளிவரும்; சிறிது காலத்தில் மறைந்துவிடும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியிலும் எமது மறைமாவட்டத்தில் "வெட்டாப்பு" என்னும் மாத இதழ் வருவதற்கு முன்பிருந்து இறை செய்திகளை இறைமக்களுக்கு அளித்துவந்த "தொண்டனின்" தொண்டு மகத்தானது.

காலத்திற்கேற்ப கலை, கலாச்சாரம், பண்பாடு, கதை, கவிதை, கட்டுரை போன்ற அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு மெருகூட்டிய நிலையில் தொண்டன் பரிமளிக்கின்றது. மத வேறுபாடுகளைக் கடந்து, மனித நேயத்துக்கு முன்னுரிமை கொடுத்து, எழுத்தாற்றல் மிக்க அனைவரது படைப்புக்களையும் இது தாங்கி வருகின்றது.

வர்ணம் தீட்டும் போட்டிகளை அறிமுகஞ் செய்து, சின்னஞ்சிறார்களின் ஆற்றல்களையும் இறைவார்த்தை அறிவையும் ஊக்குவித்துக்கொண்டிருக்கின்றது.

க.பொ.த. மாணவர்கள் பரீட்சையில் நல்ல புள்ளிகளைப் பெறும் பொருட்டு வினாவிடைகளைத் தொகுத்தளித்து, உற்சாகமூட்டி, சமய கல்விக்கு ஒரு வெளிச்ச வீடாக அமைந்து செயலாற்றி வருகின்றது.

முழு மனித வளர்ச்சிக்குத் தேவையான உளவியல், அரசியல், மருத்துவக் குறிப்புக்கள் யாவற்றையும் உள்ளடக்கி, கவர்ச்சிகரமான அட்டைப் படங்களுடன் மனங்களைக் கவர்ந்திழுத்து, வீரநடை போடும் "தொண்டன்" ஐ வாழ்த்துகின்றேன்.

"தொண்டன்" வெளியீட்டுக்காகத் தொண்டு செய்யும் அனைத்துப் பணியாளர்களையும், எழுத்தாளர்களையும் குறிப்பாக சமூகத் தொடர்பு ஆணைக்குழுவினரையும் நெஞ்சார வாழ்த்தி காலத்திற்கேற்றபடி நவீன முறையில் தொடர்ந்து "தொண்டன்" வெளிவர ஆசிக்கின்றேன்.

● **அருட்பணி. அ. தேவதாசன்**
மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர்.

# வாழ்த்துச் செய்தி



மட்டக்களப்பு மறை மாவட்ட மாத வெளியீடாக வந்துகொண்டிருக்கும் தொண்டன் சஞ்சிகை, ஐம்பது ஆண்டுகள் நிறைந்து பொன்விழாக் காண்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒரு சஞ்சிகை, ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவதென்பது சாதாரண விடயமன்று. அதிலுள்ள வலிகளை, நோவுகளை, இழப்புகளை சஞ்சிகை வெளியீட்டுத் துறையில் ஈடுபடுபவர்கள் அறிவார்கள்.

கிழக்கை - குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தளவில் ஒரு சஞ்சிகையின் ஐம்பது ஆண்டுகாலப் பயணம் என்பது ஒரு சாதனை என்பதில் ஐயமில்லை.

'தொண்டன்' ஒரு சமய சஞ்சிகை என்ற முத்திரையோடு இருப்பதும், ஒரு சமய நிறுவனத்தின் "கைத்தாங்கல்" இருப்பதும் அதன் வெளியீட்டுப் பயணத்துக்குத் துணையாக - பலமாக இருந்தாலும் அதற்கான உழைப்பை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

தொண்டனின் ஐம்பது ஆண்டுகாலப் பயணத்தில் பொதுநிலையினர், குருக்கள், துறவிகள், ஆயர் என்று பலரும் ஆசிரியர்களாக இருந்து வழிநடத்தியுள்ளனர். அனைவரும் பாராட்டுக்குரியவர்களே!


கால நீட்சியில் 'தொண்டன்' அவ்வப்போது நலிந்தும், மெலிந்தும், வீழ்ந்தும், எழுந்தும் வீரியத்தோடு நடந்து வந்துள்ளது என்பதும் உண்மையே. அவை காய்தல், உவத்தல் இன்றி ஆராயப்படுவது தொண்டனின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதாகும்.

இதுவரை காலமும் தொண்டனின் ஐந்து தசாப்த காலப் பயணத்துக்கு துணை நின்ற ஆயர்கள், குருக்கள், துறவிகள், எழுத்தாளர்கள், விநியோகஸ்தர்கள், ஆர்வலர்கள் அனைவரும் நமது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்களே!

ஓர் இலக்கியப் பணியினூடாக மக்கள் மத்தியில் இறை நம்பிக்கையை வளர்த்து, நல்லறிவைப் பெருக்கி, அன்பு நெறி செழிக்க உழைப்பதை நோக்காகக் கொண்ட தொண்டனின் ஐம்பது ஆண்டுகாலப் பயணம் மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், புதிய பொழுதுகள் புலர வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறோம்.

வாழ்க! வளர்க!

**திரு. எஸ் எஸ். ஜேசுதாசன்**
**(மலர்வேந்தன்)**
முன்னாள் 'தொண்டன்' இணையாசிரியர்




# அகவை ஐம்பது



அறுபத்தொன்பதாம் ஆண்டில் வித்தான நீ (தொண்டன்), அகவை ஐம்பதை எட்டிப் பிடித்து விட்டாய்: வாழ்த்துக்கள்!

கடுகு சிறிதானாலும் காரம் பெரிதென்பது போல மாதமொரு ஏடாய் காலத்திற்கேற்ப உன்நிலையையும் மாற்றி புதுப்பொலிவுடன் இன்று திகழ்கின்றாய். உருக்கொடுத்தவர்கள் பலர் இன்றில்லையாயினும் நீ உருக்குலையாமல் தொடர்கின்றாய். "சஞ்சிகை" வெளியீடு என்பது இலகுவானதல்ல. கால ஓட்டத்தில் பல வெளியீடுகள் கைவிடப்பட்ட நிலையிலும், கிழக்கிலங்கையில் ஒரு மூத்த சஞ்சிகையாக நீ தடையின்றி பணிவுடன் பவனி வருகின்றாய். சமூக இலக்கிய சஞ்சிகையான நீ இன, மத பேதமின்றி எழுத்துக்களால் உலகை ஆளுகின்றாய். உன் பணி தொடர வைரவிழா, நூற்றாண்டு விழா காண இறையாசீர் வேண்டி பணியாற்றும் இயக்குனர், பணியாளர்கள், ஆசிரியர் குழுமம் ஆகியோரையும் பேனா முனையால் மக்கள் மனம் கவர்ந்த எழுத்தாளர்களையும் வாழ்த்துகின்றேன்.

இறையாசீர் உங்களோடு என்றும் இருப்பதாக.

**■ அருட்பணி. ச. அன்ரனி ஜெயராஜ்**
இயக்குனர், மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு




- பேரருட்திரு ஜோசப் பொன்னையா
ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



# "ஊடகம் ஓர் அழிவு சக்தி அல்ல; ஆக்க சக்தி"

- திருத்தந்தை பிரான்சிஸ் -

"ஊடகம் இன்று அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்து ஆளுகை செய்யும் கருவி. ஒரு நாட்டையோ, நபரையோ அழிக்கும் சக்தியாக ஊடகங்கள் மாறக்கூடாது" என்று வத்திக்கானில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கையில் திருத்தந்தை கூறியுள்ளார். சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில துறைகளில் ஊடகம் அல்லது பத்திரிகைத்துறை முக்கிய இடம் வகிக்கின்றது எனத் திருத்தந்தை கூறியுள்ளார்.

**அச்சு ஊடகம் :**

பத்திரிகை உலகம், காட்சி ஊடகம், டிஜிட்டல் சமூக ஊடகங்களின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட போதிலும் சுதந்திரமான பன்மைச் சமூகத்தைக் கட்டமைப்பதில் அச்சு ஊடகவியலாளரின் பங்கு மிக முக்கியமானது என்றும் திருத்தந்தை கூறினார்.

ஊடகத் துறையில் உள்ள ஒவ்வொருவரும் நின்று "நாம் என்ன செய்கிறோம்? எப்படிச் செய்கிறோம்" என்று செயல்படக் கடமைப்பட்டுள்ளார்கள். ஊடகம் குறிப்பாக, அச்சு ஊடகம் கஸ்டமான பணி. அனைத்தையும் பதிவு செய்து வரலாறாக்கும் பணி. பத்திரிகையாளர்கள் உண்மையை அன்பு செய்யவும், பத்திரிகை தர்மத்தின்படி வாழவும், மனித மாண்பை மதிக்கவும், இம்மூன்றையும் பத்திரிகை தர்மத்தின் மூன்று முக்கிய அடிப்படைகளாக கடைப்பிடிக்கவும் கடமைப்பட்டவர்கள்.

மேலும், பத்திரிகைத் துறையில் ஒருவர் "விசுவாசியா" அல்லது "விசுவாசமற்றவரா" என்பதல்ல முக்கியம், ஒருவர் தனக்கும் பிறருக்கும் நேர்மையாக உள்ளாரா? என்பதுதான் முக்கியம். தாங்கள் எழுதும், பேசும் ஊடகங்களில் சமூக நலம், தனி மனித மாண்பு, மனித உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். இன்றைக்கு நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் வெளிக்கொணரும் செய்திகளில் எவ்வளவு உண்மையுள்ளது? செய்திகளை 100% உறுதி செய்த உண்மைகளாக வெளியிட வாய்ப்புள்ளதா? போன்ற கேள்விகளுக்கு மத்தியில் பத்திரிகையாளர் தான் வெளிப்படுத்தும் உண்மையில் மறைந்துள்ள பொய்களை இனம் காணக்கூடியவராக இருப்பதே இன்றைய அவசியத் தேவையாகும். "மனித மாண்பு" எப்போதும் பத்திரிகை மற்றும் காட்சி ஊடகங்களில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற வேண்டும். நாம் எழுதும் கட்டுரைகள் தவறானால் அடுத்தமுறை திருத்தியமைக்கலாம், ஆனால் நாம் எழுதியதால் பாதிக்கப்படும் நபர்களின் நற்பெயருக்கும் நல்லொழுக்கத்திற்கும் ஏற்படும் களங்கத்தை, அதனால் ஏற்படும் மனக்காயத்தை எப்படி நம்மால் சரிசெய்து குணப்படுத்த முடியும்?

**உலகத் தொடர்பு தினம் :**

"தொடர்பு" என்பது பகிர்தலாகும். அது செவிசாய்த்தலையும், ஏற்றுக்கொள்ளுதலையும் உள்ளடக்கியது. பிறர் சொல்வதைப் பொறுமையோடு கேட்பது ஒரு வகை அர்ப்பணம். எரியும் முட்புதரில் வெளிப்பட்ட கடவுளின் குரலைக் கேட்க முயன்ற மோசேயை நாமும் பின்பற்ற வேண்டும் (வி.ப 3:5).

அது ஓர் அருள், கடவுளின் கொடை! அவை நம் வாழ்வின் எல்லா முயற்சிகளிலும் இருக்க வேண்டும்.

மின் அஞ்சல், சமூக வலைத்தளங்கள், அச்சுப் பதிப்புகள், இணையத்தளங்கள் போன்றவை தொழில்நுட்ப வளர்ச்சி வழங்கியுள்ள தொடர்புச் சாதனங்கள். கடவுள் வழங்கியுள்ள கொடைகள்! இந்த ஊடகங்களால் சமூக நலனுக்கான உறவை வளர்த்தெடுக்க முடியும். அதேவேளை தனிமனிதரிடையே, சமூகங்களுக்கிடையே பிரிவினைகளையும், வேற்றுமைகளையும் உருவாக்க முடியும். இன்றைய டிஜிட்டல் உலகம் பொதுவானது. இதன்மூலம் ஒருவரை ஊக்கப் படுத்தலாம் அல்லது உதாசீனப்படுத்தவும் செய்யலாம். அர்த்தமுள்ள கலந்துரையாடலை உருவாக்கி வளர்க்கலாம் அல்லது அடுத்தவரைக் குறைபடுத்தித் தாக்கலாம்.

சமூகத் தொடர்பு சாதனங்கள் உறவுப் பாலங்களைக் கட்டியெழுப்பும் சக்தி பெற்றவை. மனித சமூகங்களை ஒன்றிணைக்கும் ஆற்றல் பெற்றவை. மிகுந்த கவனத்தோடும், பொறுப்பு ணர்வோடும் மனிதர்கள் தம் பண்பட்ட சொற்க ளால், செயல்களால் சமூகங்களில் நிலவும் புரிந்து கொள்ளாமையை மாற்றுவதும், காயம்பட்ட மனங்களில் அமைதியையும் அன்பையும் வளர்த் தெடுக்க முயற்சிப்பதும் மேன்மை மிக்கதாகும்.

**இணையம் :**

நம் காலத்தில் தவிர்க்க முடியாத இன்னொரு பிரமாண்ட உலகம் இணையம். காலையில் தூங்கி எழுவது முதல் இரவு படுக்கச் செல்லும் வரை நிகழ்கால உலகம் இந்த இணைய உலகிற்குள் முடங்கிக் கொண்டிருக்கிறது.

உலக மக்கள் தொகையில் சரி பாதி பேர் இணையத்தளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். அதாவது சுமார் 317 கோடி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அதில் 200 கோடிபேர் சமூக வலைத்தளங்களின் தொடர்பில் இருக்கின்றனர். அதாவது உலக சனத்தொகையில் சுமார் 30 சதவீதம் மக்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். சுமார் 190 கோடி பேர் தங்களது மொபைல் மூலம் சமூக வலைத் தளங்களோடு தொடர்ச்சியாக தொடர்பில் இருக்கி றார்கள்.

- தினமும் 20 இலட்சம் ஸ்மாட் போன்கள் விற்பனையாகின்றன.
- ∴பேஸ்புக் வலைத்தளங்களில் ஒரு நாளைக்கு 5 இலட்சம் புதிய பயனாளிகள் பதிவு செய்கிறார்கள்.

இப்படிப் பல தரப்பினரையும் தொடர்பு கொள்வதற்கு சமூக வலைத்தளங்கள் மாறியிருப் பதால் இதைச் சாதகமாகப் பயன்படுத்தி பல வெற்றிகளைக் காணமுடியும்.

சமூக வலைத்தளப் பயன்பாட்டில் ∴பேஸ்புக் தான் முன்னிலை வகிக்கின்றது. பயனாளிகள் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட இதை தங்களது சொந்த இணையத்தளம் போல் பயன்படுத்தி வருகின்றார்கள். உலக அளவில் 140 கோடி மக்கள் ∴பேஸ்புக் பயன்படுத்துகின்றனர்.

மக்கள் தங்கள் எண்ணங்கள், தகவல்கள் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், புதிய உறவுகளையும், புதிய குடும்பங்களையும் உருவாக்கவும் மின்னணு-சமூக வலைத்தளங்கள் பெரும் பங்களிக்கின்றன. பல தரப்பினரையும் தொடர்புகொள்ளும் ஊடகமாக இந்த சமூக வலைத்தளங்கள் மாறியிருப்பதால் இதன்மூலம் பல வெற்றிகளைக் காணமுடியும்.

சமூக வலைத் தளங்கள், திரைப்படங்கள், ஊடகங்கள் என்பன, பெண்ணை ஆண் அனுப விக்க வேண்டிய ஒரு பண்டமாகக் காட்டு கின்றன. இணைய வன்முறைகள் பெருகி, பெண்கள் தற்கொலைக்குத் தள்ளப்படுவதைத் தடுக்க, பெண்களை சக மனுஷியாக, உயிரும் உணர்வுமுள்ள நம் அம்மா, அக்கா, தங்கை, மனைவி, காதலி, அத்தை மற்றும் சித்தி போன்றவர்கள் என்ற உணர்வை ஆண் குழந்தை களிடம் ஊட்டி வளர்ப்போம்! இனி ஒரு பெண் இணைய வன்முறைக்கு ஆளாகாமல் தடுப்போம்.

**தொலைக்காட்சி – நன்மை, தீமை :**

இன்று பெரும்பாலான மக்கள் எளிதாகச் சென்றடையக்கூடிய ஊடகம் தொலைக்காட்சி. தனியார் தொலைக்காட்சிகள் மூலம் நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் சிறந்த கலாச்சாரங்கள், பண்பாடுகள் எவ்வாறு படிப்படியாகத் திட்டமிட்டு திறமையாகச் சீரழிக்கப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை. உ+ம் "ஒருவ னுக்கு ஒருத்தி" என்பது நம்முடைய கலாச்சாரம். இப்போது ஒளிபரப்பப்படுகின்ற எல்லாத் தொடர்களிலுமே ஏறக்குறைய "ஒருவனுக்கு இருவர்" அல்லது "ஒருத்திக்கு இருவர்" என்ற கலாச்சாரம் புகுத்தப்பட்டு வருகிறது. சந்தர்ப்பச் சூழலால் நம் கலாச்சாரத்தில் ஒருவன் இரு பெண்களோடு வாழலாம்" என்ற மனநிலைக்கு மக்களைத் தயார்செய்து வருகின்றன நம் தொலைக்காட்சி நாடகங்கள் என்றால் மிகையாகாது. இன்று நம் சமுதாயத்தில் விவாகரத்து வழக்குகள் அதிகமாகிவிட்டதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இவ்வாறான சூழலுக்கு மக்களை இட்டுச் செல்வதில் இத்தொலைக்காட்சிகளின் பங்கு நிச்சயமாக இல்லை எனச் சொல்ல முடியாது.

எனவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டாம், தரமான நிகழ்ச்சிகளை மட்டும் பாருங்கள் என நாம் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. அது வீட்டுக்கு நடுவில் குப்பையைக் கொட்டி வைத்துக்கொண்டு "அதைத் தொடாதே! அழுக்குப் பட்டுவிடும்" எனச் சொல்வதைப்போல முட்டாள்த்தனமானது. ஏனென்றால் இன்று ஊடகங்கள் மக்கள் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. அவற்றைத் தாண்டி வேறோர் உலகத்தில் வாழமுடியாது என்ற நிலையில் இளையோரும் மற்றவரும் வாழக்கூடிய சூழல் உள்ளது. ■



## நூல் வெளியீடு

பேரருட்கலாநிதி ஜோசப் பொன்னையா
ஆண்டகை அவர்களின் புதிய உருவாக்கத்தில்
**"விடுதலைப் பயணம்"** - ஒரு திறனாய்வு




## "காயப்பட்ட மேய்ப்பர்"

**வத்திக்கான் செய்தி**



- ✔ Austen Ivereigh என்ற எழுத்தாளர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைக் குறித்து எழுதியுள்ள இரண்டாவது நூல், "காயப்பட்ட மேய்ப்பர்"
- ✔ திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், கத்தோலிக்கத் திருஅவையை மனமாற்றம் பெறச் செய்வதற்கு அவரது போராட்டமும்" ("Wounded Shepherd: Pope Francis and His Struggle to Convert the Catholic Church") என்ற தலைப்பில் வெளிவருகிறது.
- ✔ இந்நூல் வத்திக்கானில் மாற்றங்களைக் கொணர்வதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பற்றி கூறுகிறது.

# வாடா மலருக்கொரு வாழ்த்து!



■ பி. டெனிஸ்ரன்
சொறிக்கல்முனை

இலக்கியவழி இறைவார்த்தை விதைப்பவனே
செதுக்கும் உழியாய் சிந்தனை கொடுப்பவனே
சில பல சிற்பிகளை சீர்தூக்கி எடுத்தவனே
அகவை பல கடந்து
இதயம் பல சுமந்து
இமயமாய் எழுந்து நின்று
மறையும் தமிழும் வளர்க்கும்
மங்காப் புகழ் கொண்ட
கிழக்கின் கிறிஸ்தவ தொண்டனே
உனை வாழ்த்த உயர்கிறது என் பேனா

ஆறு இதழ் கொண்ட மலராய் 69ல் பிறந்தனையோ
ஆயர் கிளெனி அவர்கள் ஆசியுரை கொண்டனையோ
மட்டு-திருமலையின் ஐக்கிய சங்க அகவை 41ல்
அந்தோணிப்பிள்ளை ஆசானாய்
பிறப்பித்த மலர் நீயோ
பதினைந்து சதத்தில் விலை கொண்டு
மக்கள் மனதில் நிலை கொண்டு
ஆண்டுகள் ஐம்பது எனும் அரைச்சதம் கடந்து
ஆட்சி செய்யும் தொண்டனே
அகலாது, விலகாது, அடி சறுக்காது உலகில்
அரசாள வேண்டும் நீ ஆண்டுகள் நூறு.

எத்தனையோ ஆசான்கள் எத்தனையோ வளர்ச்சிகள்
ஆண்டுகள் கடக்க விலையிலும் உயர்ச்சிகள்
உருண்ட காலச்சக்கரத்தில் உன்னுள்
எத்தனையோ இலக்கிய மலர்ச்சிகள்
ஆழியோன் கையேற்ற
இளைஞர் அரங்கம் தொட்டு
நாவண்ணன் தொடர்கதை நயமாய் ஏற்று
நெருப்பிடை நீந்தும் நிலாக்களை மலர் சுமந்தாய்
யாழ் நூல் யாத்த முத்தமிழ் வித்தகன் நூற்றாண்டில்
பரமேஸ்வரியின் தொடர்கதையும் சுமந்தாய்
இறையியலை இலக்கியமாய் சுமப்பவனே
உம் பாதங்களும் புனிதம் என்றும் புனிதமே!

கால மாற்றங்கள் கலாச்சாரங்களைச் சீரழிக்கின்றன
மத நம்பிக்கைகளில் நஞ்சை தெளிக்கின்றன
விசுவாசிகளின் மனதில் விச வண்டுகளை மேய்க்கின்றன

இரத்த சரித்திரம் படைத்து இகமதில் மதம் காத்தோர்
மரபும் மாட்சியும் மானுடம் அறியாக் காலமாய்
விஞ்ஞான உலகம் விதைக்கும்
திசை திருப்பப்பட்ட மனிதனை
இறையியலில் வளர்க்கும் இறை தொண்டனே
அச்சகம் எனும் கருவறையில் உருவாகி
வாசகனின் கைக்குழந்தையாய்
வலம் வரும் நீ உள்ள மட்டும்
இறையும் மறையும் மரபும் இறவாமல் வளர்ந்திடுமே

பொன் விழா நாயகனே இலக்கிய தூதுவனே
இறையியலின் எழுத்து வடிவ காவலனே
உன் பணி இறவாத உதிராத மலராய்
எங்கும், எவர்க்கும், அந்த இறைக்கும் பணியாற்றும்
மனம் நிறைந்த ஆசிராய் தமிழ் வார்த்தை மலர்
தூவினேன்
மரணமே இன்றி மங்காப்புகழ் கொள்வாயாக
அறிவோம் அறிவிப்போம் மகுட வாக்கியத்துடன்
உன் கரம் கோர்த்து இன்னும் பயணிப்போம்.





# தலை குனிந்து என்னைப் பார்!



▪ அருட்பணி. லெஸ்லி ஜெயகாந்தன்
முன்னாள் 'தொண்டன்' ஆசிரியர்

எமது மறைமாவட்டத்தின் ஊடக சஞ்சிகையில் ஒன்றான 'தொண்டன்' சஞ்சிகையானது 50 வருடத்தில் காலடி எடுத்துவைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இச் சஞ்சிகையானது சமய, சமூக, பல்சுவை அம்சங்கள் கொண்ட சஞ்சிகை என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். எமது மறைமாவட்டத்தின் நற்செய்தி அறிவிப்பு ஆண்டிலே தொண்டனின் சேவையானது 50 ஆண்டுகள் என்பது ஒரு மைல் கல்லே!

புனித பவுல் அடிகளார் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலே அழகாகக் கூறுகின்றார் (கலா 4:19):

"என் பிள்ளைகளே! உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகின்றேன்" என்று.

**அது** ஒரு வைத்தியசாலை. மூன்று பணக்கார தொழிலதிபர்களினுடைய மனைவிமார்கள் பிரசவத்திற்காக ஒரே நேரத்தில் அனுமதிக்கப் பட்டார்கள். சிறிது நேரம் கழித்து தாதியொருவர் வந்து அங்கு நின்ற முதலாவது தொழிலதிபரைப் பார்த்துச் சொன்னார்: "உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளனர்". அவரோ அச் செய்தியை சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டு, "ஆ... அப்படியா ... சரி!" என்றார். அதற்கு அந்த தாதி, "நான் சந்தோசமான ஒரு விடயத்தைச் சொல்கிறேன், நீங்கள் அதைப் பொருட்படுத் தாமல் சர்வ சாதாரணமாக இப்படிப் பதில் சொல்கிறீர்களே!" என்றார். அதற்கு அந்த தொழில திபர், "வேறு ஒன்றுமில்லை. நான் 'ஜோன்சன் அன்ட் ஜோன்சன்' (Johnson & Johnson Company) கொம்பனியின் சொந்தக்காரர்" என்றார்.

சிறிது நேரம் கழித்து அந்தத் தாதி மீண்டும் வந்து மற்ற பணக்காரரிடம் சொன்னார், "உங்கள் மனைவிக்கு மூன்று குழந்தைகள் பிறந்துள்ளனர்". அவரும் அதைப் பொருட்படுத்தாமல், "ஓ.. அப்ப டியா! நான் 'த்ரீ ரோசஸ் (Three Roses Company)' கொம்பனியின் சொந்தக்காரர்" என்றார்.

இந்நிகழ்வுகளைப் பார்த்துக்கொண்டிருந்த 3வது பணக்காரர் அங்கிருந்து ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார். சற்று நேரத்தில் அங்கு வந்த தாதி குறிப்பிட்ட அந்த 3வது பணக்காரரைத் தேடினார்: ஆனால் அவர் அங்கு இல்லை. அங்கு நின்ற 'Three Roses' கொம்பனி உரிமையாளரிடம் விசாரித்த போது அவர் சொன்னார், "அடுத்து நீங்கள் என்ன செய்தியைச் சொல்லப் போகிறீர்கள் என்று தெரிந்துதான் அவர் இங்கிருந்து ஓட்டம் பிடித்தார்" என்றார். அதற்கு அந்த தாதி, "அந்தப் பணக்காரர் யார்?" என வினவியபோது விடை வந்தது, "அவர்தான் 7UP சோடா கொம்பனியின் சொந்தக்காரர்" என்று.

இயேசு கிறிஸ்துவும் இறையரசைப் பரப்புவ தற்காக பவுல் அடிகளார் சொல்வதைப்போல் அவரும் பேறுகால வேதனையுற்றிருக்கலாம். எனவேதான் இறையரசை மக்களுக்குப் பரப்ப அவர் கையாண்ட ஊடக முறைகளாக உவமைகள், புதுமைகள், அக்காலச் சூழ்நிலைகள், நடைமுறை விடயங்கள் இருந்தன என்பது உண்மையே.

இயேசுவின் போதனைகளில் இதயமாக இருந்தவை அவரது உவமைகள் என்றால் அது மிகையல்ல. இவற்றின் மூலம் நற்செய்தியைப் பரப்பினார்.


முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய இறைவன் இறுதி நாட்களில் தம்மகன் கிறிஸ்துவின் மூலம் பேசினார்.

இன்றைய காலப்பகுதியில் நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது வெறுமனே பீடத்து போதிப்புக ளோடு நின்று விடாமல் ஊடகத்தின் ஊடறுப்புக்களின் ஊடாகவும் அறிவிக் கப்படுகின்றது. அவை யாவன: தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தளம், மின் அஞ்சல்.

அந்தவகையில், சமய சமூக பல்சுவை நிகழ்வுகளைக் கருத்தாங்கி சமூகத்துக்கு விழிப் புணர்வை கொண்டுவரும் ஒரு சஞ்சிகையான "தொண்டன்" ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகளை அகவையில் கால்பதித்திருப்பது ஒரு மைல் கல்லே! எனவே, தொண்டனின் சமூகப் பணியானது எமது மறைமாவட்டத்திலும், ஏனைய மறை மாவட்டங்களிலும் தொடரவும், பல சிந்தனையாளர்களை உருவாக்கவும், பல ஆக்கத் திறனாளிகளை இனங்காணவும், இவ் நற்செய்தி ஆண்டிலும், இனி வரும் காலங்களிலும் சஞ்சிகையின் பணி தொடர என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

***"தலை குனிந்து என்னைப் பார்***
***தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன்"***

- இப்படிக்கு புத்தகம் -



## "நற்செய்தியின் கதவுகளை, அனைவருக்கும் திறந்துவைக்க...

- இறையன்பிற்கு உன்னத சாட்சிகளாக இருக்க, தூய ஆவியார் நம்மைத் தூண்ட வேண்டுமென்று மன்றாடுவோம்"
- நற்செய்தியை அறிவிப்பது எமது முக்கிய இலக்குகளில் ஒன்று.
- நற்செய்தி அறிவிப்புப்பணி என்ற கடல் பயணத்தில், பாதுகாப்பான கரைகளையும் துறைமுகங்களையும் விட்டு, கடலில் பயணம் மேற்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம்
- கடவுளின் வார்த்தையை அறிவிப்பதில் ஒரு புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணமும் ஒத்துழைப்பும் எமக்கு தேவைப்படுகின்றன.



"தொண்டன்" பொன்விழாவை முன்னிட்டு இடம்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

# ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அன்னை மரியாள்

"அம்மா என்று அழைக்காத உயிரில்லையே...."

மனித குலத்தின் மீட்புத் திட்டத்தில் முக்கிய பங்காளியாகத் தன் ஏக மகன் இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்புவதற்கு அன்னை மரியாளை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். இறைவனின் சொல்லுக்கு எதிராகப் பாவ வாழ்வில் மனிதன் தன் பயணத்தைத் தொடரப் போகின்றான் என்பதை இறைவன் அறிந்தார். மனிதனைப் பாவ வாழ்வில் இருந்து மீட்க அவன்மீது இரக்கம் கொண்டார். அதற்காக ஒரு பெண்ணை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். ஆண்டவர் தன் விருப்பத்தின்படியே அன்னை மரியாளைத் தேர்ந்தெடுத்தார்.

சுவக்கின், அன்னம்மாள் இருவருக்கும் மகளாகப் பிறக்க அன்னை மரியாளை அன்னம்மாளின் கருவிலே உருவாக்கினார். நீரோடு வேரும், சேறோடு சோறும், கருமேகம் நட்பும் கொள்ளாவிட்டால் எமக்கு மழை இல்லை. அதேபோல் ஆண்டவர் அன்னம்மாள் மூலம் மரியாளைப் பிறக்கச் செய்யாவிட்டால், மனித இனத்தைப் பாவத்திலிருந்து மீட்க மரியாள் மூலம் இரட்சகர் இயேசுவை அனுப்பி இருக்காவிட்டால் மனிதனுக்கு மீட்பு இல்லை.

ஏழு வயதிலே கோவிலிலே ஆண்டவரிடம் அர்ப்பணிக்கப்பட்டவர் மரியாள். கன்னிமைக்குப் பழுதின்றி இருந்த மரியாளை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். அன்புக்கு உவமை அன்னை மரியாள். சிறுவயதில் மரியாளை வளர்க்கும் பொறுப்பை சக்கரியா ஏற்றுக் கொண்டார். கோவிலுக்கு மரியாள் வரும்பொழுதெல்லாம் கைநிறைய உணவைக் காணிக்கையாகக் கொண்டுவருவாராம். 'ஆண்டவர் தந்தார்' என்றும் கூறுவாராம். ஏன் கன்னிப் பெண்ணான மரியாளை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார்...? மரியாள் கோவிலிலே எந்நேரமும் ஆண்டவரை நோக்கித் தியானித்தார். ஆண்டவர் தனது தூதுவர் கபிரியேலை கன்னி மரியாளிடம் அனுப்பினார். "மரியா அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்" (லூக்கா 1:30-32). தூதுவரின் உரை கேட்டு மரியாள் அஞ்சினார். "இது எப்படி நிகழும் நான் கன்னியாயிற்றே" (லூக்கா 1:35) என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால், உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" மரியாள் ஆண்டவரின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து மனிதகுலத்தன் மீட்புக்காக ஆண்டவருக்கு அடிபணிந்தார்.

உலகம் தோன்றியது முதல் கடந்திராத கன்னிப் பிறப்பை தன் கருவிலே ஏற்றுக் கொண்டார் மரியாள். இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆவியானவரால் நிரப்பப்பட்டதால் மரியாள் வார்த்தையானவரையே தம் கருவிற் தாங்கி இறைமகன் இயேசுவை மனித மீட்புக்காகப் பெற்றெடுத்தார். "உருவில்லான் உருவாகி உலகில்

ஒரு மகன் உதிப்பக் கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே" – வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். உடல் இச்சையினாலோ ஆண் மகன் விருப்பத்தினாலோ இல்லாமல் இறைமகன் இயேசுவைப் பெற்றெடுத்தார் (யோவான் 1:13). உடல் அளவிலே மட்டுமல்ல ஆன்மாவிலும் அவர் கன்னியாக விளங்கினார்.

உலகம் உருவாகு முன்னரே ஆண்டவர் நமது மீட்புக்காக (எபே 1:4) இயேசுக் கிறிஸ்துவை அனுப்பச் சித்தம் கொண்டபோது அவருக்குத் தாயாக இருக்கும்படி மரியாளைத் தேர்ந்து கொண்டார். மரியாள் அருள் நிறைந்தவராக இறைவனோடு எப்பொழுதும் இணைந்திருந்தாள் (லூக்கா 1:28). இயேசு மனித உருப் பெற மரியாளை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். ஆண்டவர் திருமுன் மரியாள் தன்னைத் - தாழ்த்திக் கொண்டார் (லூக்கா 1:38).

அன்னை மரியாள் ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்தவர். கன்னியாக இருந்தும் இயேசுவைப் பெற்றெடுத்ததால் மாத்திரமல்ல ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு அந்த வார்த்தைக்குக் கீழ்ப் படிந்து இறைச் சித்தத்தை ஏற்றுக் கொண்டார். பிறரன்புக்கு உதாரணம் அன்னை மரியாள் (லூக்கா 1:39). செப வாழ்வுக்கு எடுத்துக்காட்டு அன்னை மரியாள். இறைவனின் தூதர் முன்னிலையில் "தாழ்நிலை நின்ற அடிமை" (லூக்கா 1:48) என்று கூறித் தன்னைத் தாழ்ச்சி உள்ளவராக்கினார். தன்னைத் தகுதியற்றவர் என்று கூறினார். வானதூதர் அவரை நோக்கி, "அஞ்ச வேண்டாம்" (லூக்கா 1:30) என்று கூறினார்.

மரியாள் மாசற்றவர்: இறைமகன் இயேசுவைக் கருத் தாங்குவதற்கு முன்பும் கன்னியாக இருந்தார். கன்னிமை இழக்காமல் இயேசுவைப் பெற்றெடுத்தார். கல்லறைச் சுவர் மூடி இருக்க இயேசு கல்லறையை விட்டு எப்படி வெளியேறினாரோ அப்படியே மரியாளிடமிருந்து இயேசுவின் பிறப்பும் இருந்தது. முப்பொழுதும் எப்பொழுதும் மரியாள் கன்னியாகவே இருந்தார். மாசில்லாக் கதவு வழியாக இறைமகன் இயேசு உலகிற்கு வந்தார். தாழ்ச்சியும், மாசுமற்ற மரியாளை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார்.

பரிசுத்த ஆவியானவர் மரியாளின் உதிரத்தை தம் திருத்தலமாகத் தெரிந்து கொண்டார். எனவே தான் மரியாள் வாக்குத் தத்தத்தின் பெட்டகமாகின்றார். இதோ ஆண்டவரின் அடிமை என்று கூறிக் காலமெல்லாம் உள்ளத்திலும், உடலிலும் ஆண்டவருக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தவர் மரியாள். இயேசுவின் இறைத் தன்மையைப் புரிந்து கொண்டவர் அன்னை மரியாள்.

ஆண்டவரின் சித்தப்படி மரியாள் இயேசுவின் உடலைத் தன் கருவறையிற் தாங்கினார். தன் பரிசுத்த உதிரத்தால் கருவறையில் அவரை வளரச் செய்தார். மரியாளின் இறையியல்பையும், மனித இயல்பையும் பிரிக்க முடியாது. எலிசபெத்தம்மாள் "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! ஏன் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக்கா 1:42-43) பிறரன்புக்கு உதாரணம் மரியாள். ஊதவி செய்வதில் முன் நின்றார் (லூக்கா 1:56).

ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அன்னை மரியாள். இயேசு சிந்திய இரத்தம் நம்மை மீட்கிறது என்றால், ஒரு வகையில் அந்த இரத்தம் மரியாளின் இரத்தம்தானே. மரியாளும் பரிசுத்தமானவர்தானே. இறைமகன் இயேசுவின் கால்பட்ட இடங்களைப் புனித பூமி என்று முழங்காலில் நின்று வணங்குகின்றோம். அப்படியானால் இறைமகன் இயேசுவைத் தன் கருவறையில் தாங்கிப் பெற்று, வளர்த்து, உலக மீட்பரை எமக்களித்த அன்னை மரியாள் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தானே!

மரியாள் ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்தார் என்று திருச்சபையில் ஆதிமுதல் இருந்து வந்த விசுவாசத்தை 1854ல் 9ம் பத்திநாதர் பிரகடனம் செய்தார். 1858 இல் லூர்து நகரில் காட்சி தந்த அன்னை மரியாள், "நாமே அமலோற்பவம்" என்று சொல்லி அந்த விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்.

அன்பும் அருளும் நிறைந்த அன்னை மரியாளுக்கு மேன்மையான வணக்கம் செலுத்துவோமாக!

- **திருமதி. லீலா சந்ரசிறி**
அக்கரைப்பற்று



# 15வது இயக்குனராக ...

நற்செய்தி அறிவிப்பு ஆண்டிலே, மட்டக்களபப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தால், "அறிவோம் அறிவிப்போம்" எனும் மகுட வாசகத்தைத் தாங்கி சமய, கலை, கலாச்சார, இலக்கிய செய்திகளைச் சுமந்து வெளிவரும் "தொண்டன்" சஞ்சிகையானது இன்று பொன் விழாவினைக் காண்பதென்பது இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். இந்த நிலையத்தின் இயக்குனர் வரிசையில் 15வது இயக்குனராக நானும் கடமையாற்றியதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். "தொண்டன்" சஞ்சிகையானது பல கதாசிரியர்களையும், கவிஞர்களையும், ஓவியர்களையும், அறிவுத் துணுக்குகள் வாயிலாக நுண்ணறிவாளர்கள் பலரையும் உருவாக்கியதோடு மட்டுமன்றி பல போட்டியாளர்கள் மத்தியில் போட்டியில் வெற்றி பெற வேண்டும் எனும் உத்வேகத்தையும் உருவாக்கிய சஞ்சிகையாகும். இனி வரும் காலங்களிலும் இந்த மாதாந்த தொண்டன் சஞ்சிகையானது இதன் வளர்ச்சியில் மென்மேலும் வளர வேண்டுமென எனது ஆசீரையும் வழங்குகின்றேன்.

– அருட்தந்தை P. ரமேஷ் கிறிஸ்ரி –

## "தொண்டன்" சஞ்சிகையின் பொன்விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரை, கவிதை போட்டிகளில் பரிசு பெறுவோர்....

1ம் பரிசு கட்டுரை
திருமதி. லீலா சந்ரசிறி
7/8, பொது வீதி, அக்கரைப்பற்று 8/2

2ம் பரிசு கட்டுரை
செல்வி. M.N. சக்கரியாஸ்
34, பேபி சிங்கம் தெரு, கல்லடி, மட்டக்களப்பு.


3ம் பரிசு கட்டுரை
திருமதி. நவமணி உலகராஜா
பிரதான வீதி, தம்பிலுவில் – 01

1ம் பரிசு கவிதை
திரு. S. குமாரராசா
6/50, சொறிக்கல்முனை

2ம் பரிசு கவிதை
செல்வி. கை. டானியா
24/11, 1ம் குறுக்கு, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.

3ம் பரிசு கவிதை
திரு. இ.அ. அமலரட்ணம்
200, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

# மௌனம் ஒரு மகா சக்தி!






ஜே. எச். இரத்தினராஜா

ஒரு இயந்திரம் மிக நன்றாக வேலைசெய்யும் நிலையில் இருக்கும்போது சத்தம் மிகக் குறைவாகவே இருக்கும். அதன் வேலை செய்யும் திறன் பழுதுபடும்போதுதான் சத்தம் அதிகரிக்கத் துவங்கும். இது இயந்திரத்திற்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் பொருந்தும். நிறைய சாதித்தவர்கள், மனித சமுதாயத்தில் தங்கள் காலடித் தடங்களைப் பதித்துவிட்டுப் போனவர்களது வாழ்க்கையை ஆராய்ந்தோமானால் அவர்கள் ஓயாமல் பேசுபவர்களாக இருப்பதில்லை. 'நான் இப்படிச் செய்யப்போகிறேன்', 'நான் அப்படிச் சாதிக்கப்போகிறேன்' என்றெல்லாம் வாய் கிழிய சொல்லிக்கொண்டு இருப்பதில்லை. வம்பு பேசுபவர்களாகவோ, அடுத்தவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அலசுபவர்களாகவோ, விமர்சித்து மகிழ்பவர்களாகவோ இருப்பதில்லை. அவர்களுக்கென்று வாழ்க்கையில் குறிக்கோள் இருக்கிறது. அதில்தான் அவர்களுக்கு முழுக் கவனமும், உற்சாகமும் இருக்கிறது. அவர்களிடம் தேவையற்ற பேச்சுக்களுக்கு நேரமோ மனமோ இருப்பதில்லை.

அமைதியாக இருக்கும்போதுதான் தெளிவாக சிந்திக்க முடிகிறது. தெளிவான சிந்தனைக்குப்பின் பிறக்கும் செயல்களே சிறப்புறுகின்றன. எதிலும் நமது முழுத்திறமையும் வெளிப்பட வேண்டுமானால், மனதை ஒழுங்குபடுத்தி, அனைத்து சக்திகளையும் நாம் ஒருமுகப்படுத்தவேண்டும். இது பேசிக்கொண்டே இருக்கும் சந்தர்ப்பங்களில் சாத்தியமாவதில்லை. மௌனம் நமது சக்திகளை விரயமாக்காமல் சேமிக்க உதவுகிறது. ஓயாமல் பேசிக்கொண்டிருக்கையில், நமது நேரத்தையும் சக்திகளையும் விரயமாக்குவதுடன் அடுத்தவர்களையும் தொந்தரவு செய்கிறோம். சொல்ல வேண்டி இருக்காத, பின்னால் நம்மை வருந்த வைக்கிற எத்தனையோ விஷயங்களைச் சொல்லியும் விடுகிறோம்.

நிறுத்தாமல் பேசுபவர்கள் மற்றவர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஒரு முறை வின்ஸ்டன் சர்ச்சிலை ஒரு விருந்தில் சந்தித்த மூதாட்டி ஒருவர் அவரிடம் "நான் என் பேரனைப்பற்றி உங்களிடம் சொன்னதில்லை என்று நினைக்கிறேன் என்றார். வின்ஸ்டன் சர்ச்சில் "தாங்கள் சொன்னதில்லை. அதற்காக நான் தங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லி அங்கிருந்து வேகமாக நகர்ந்து விட்டார். மற்றவர்களுக்குத் தேவையில்லாததையும், விருப்பமில்லாததையும் சொல்லாமல் நாமும் மற்றவர்களின் நன்றிக்குரியவர்களாவோமாக.

ஒரு கிரேக்க ஞானி சொன்னதைப்போல், "உங்கள் பேச்சு மௌனத்தை விடச் சிறப்பாக இருக்குமானால் மட்டுமே பேசுங்கள். இல்லையேல், மௌனமே நல்லது" உண்மையில் மேற்போக்காக நாம் வாழும்போதுதான் அதிகமாக வாக்குவாதங்களில் ஈடுபடுகிறோம். அடுத்தவர்களை விமர்சிக்கிறோம். சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகிறோம். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறோம். ஆனால், வாழ்க்கையில் ஆழமான நிலை அடையும்போது இயல்பாகவே பேச்சு குறைந்து விடுகிறது.

நாம் பேசிக்கொண்டிருக்கும் போதும் மற்றவர்களின் இரைச்சலைக் கேட்டுக்கொண்டிருக்கும் போதும் நமக்குள்ளே இருந்து மெலிதாகக் கேட்கும் ஒரு குரலைக் கேட்க முடிவதில்லை. அந்தக் குரலைக் கேட்கவும் அதன்படி நடக்கவும் முடிந்தால் மட்டுமே ஒவ்வொருவனும் தன் தனித்தன்மையை

அறியமுடியும். தன் தனித்தன்மையை அறிய முடியாதவன், அடுத்தவர்களின் கருத்துக்களின்படி வாழவும் செயற்படவும் முற்படுகிறான். அப்படி வாழப்படும் வாழ்க்கை இரண்டாம் தர, மூன்றாம் தர வாழ்க்கையாகவே இருப்பதில் ஆச்சரிய மில்லை. ஆகவே, எதிலும் முத்திரை பதிக்க விரும்புபவர் யாராயினும் முதலில் பேச்சைக் குறைத்து தங்கள் உளளே ஒலிக்கும் குரலைக் கவனிக்க ஆரம்பிப்பது அவசியம். எனவே, முதலில் நமக்கும் மற்றவர்களுக்கும் பயன் தராத தேவையில்லாத பேச்சுக்களைக் குறைத்துக் கொள்வோம். இதன் மூலம் அடுத்தவர்களும் இத்தகைய பேச்சுக்களை நம்மிடம் தாங்களாகக் குறைத்துக் கொள்வார்கள். ஏனென்றால் ஒரு கை ஓசை இருக்க முடியாதல்லவா? இது பல பிரச்சினைகளை தவிர்க்கவும், நம்மைச் சுற்றி ஓர் அமைதியான சூழ்நிலையை உருவாக்கவும் பெரிதும் உதவும்.

பலரும் மௌனம் என்று குறிப்பிடுவது வாய் மூடியிருப்பதையே என்றாலும், மௌனத்தையே என்றாலும் இது ஓர் ஆரம்பம் மட்டுமே. இதைக் காட்டிலும் உயர்ந்த மௌனம் இன்னொன்று உள்ளது. அது உள்ளே நிகழும் மௌனம். மனம் அமைதியடையும் போதே அந்த மௌனம் சாத்தியமாகிறது. வாய் மூடி இருந்தாலும், மனம் ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால் வெளிப்புற மௌனத்தால் பெரிய அளவு பலன்களை நாம் எதிர்பார்க்க முடியாது. உட்புறமும் மௌனத்தை அனுசரிக்க முடிந்தால் அதனால் கிடைக்கும் பலன்கள் அளவில்லாதவை. இந்த உட்புற மௌனத்தை அடைய தியானம், ஆத்ம விசாரம் ஆகியவை உதவுகின்றன.

ஒவ்வொரு முக்கியமான செயலைச் செய்யும் முன்னும் ஓரிரு நிமிடங்கள் மௌனமாய் இருப்பது, சிதறும் சக்திகளைச் சேர்த்து ஒழுங்குபடுத்த உதவுகிறது. இப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி களை முறையாகப் பயன்படுத்தி ஒரு செயலைச் செய்யும்போது அது மிகச் சிறப்பாக அமைவ தில் ஆச்சரியமில்லை. மேலும், எல்லா புதிய பரிமாணங்களும், ஆழமான அர்த்தங்களும் நமக்குப் புலனாவது நாம் இப்படி மௌனமாக இருக்கும் போதுதான். நம் உண்மைமான தேவை என்ன? அதற்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு குழப்பமில்லாமல், தெளிவாக விடை காண்பது இந்த ஆழமான மௌனத்தின்போது எளிதாகி றது. அதற்கான பெரும் சக்தியும், இந்த மௌனத்தில் நம்முள் பிறக்கிறது. ஒரு பெரும் சூறாவளியின் சகல சக்திகளுக்கும் மூலம் அதன் அமைதியான மையத்தில் இருப்பதுபோல, எல்லா சாதனைகளையும் புரியத் தேவையான மகா சக்தியை நம்முள்ளே பிறக்கும் அந்த மௌனத்தில் நாம் காண முடியும்.

*திரைகடல் கரைதழுவி கொஞ்சி விளையாடும்*
*மீன்பாடும் தேன்நாடாம் மட்டக் களப்பினிலே*
*அரை நூற்றாண்டுகள் திருமறைத் 'தொண்டனாய்"*
*அருள் மணம் பரப்பி அயராது பணிசெய்து*
*உரைநடையாய் கட்டுரை கவிதைகள் வினாவிடையாய்*
*திருமறைக்கு உதவினாய் தமிழ்த் தூதனாய்*
*வரையுடை கரும்பில் வடித்த தேன்பாகாய்*
*இனித்த 'தொண்டனே" பொன்விழா வாழ்த்துக்கள்!*



# இதுவரை 3 இதழ்களே



'தொண்டன்' கிழக்கிலங்கையிலிருந்து வெளிவருகின்ற சமய, சமூக, இலக்கியத் திங்களேடாகும். 1969ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சிற்றிதழானது இவ்வாண்டில் அதன் ஆரம்பத்தின் பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சமூகத் தொடர்பு நிலையத்தின் செய்தி மடலாக ஆரம்பிக்கப்பட்ட தொண்டன் சஞ்சிகையானது, இன்றும் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மாதாந்த இதழாக தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்வினைத் தருகின்றது.

இலங்கையின் சிற்றிதழ்கள் வரலாற்றில் மூன்று இதழ்களே இதுவரையில் பொன்விழா கண்டு தொடர்ந்தும் இடைவிடாது வெளிவந்து கொண்டிருக்கிறன. அவற்றுள் 'சிரித்திரன்', தமிழின் முதல் நகைச்சுவை சித்திர திங்கள் ஏடு – 1963இல் கொழும்பில் ஆரம்பித்து தற்போது யாழ்ப்பாணத்தில் தொடர்ந்த வண்ணமுள்ளது. மற்றது எழுத்தாளர் டொமினிக் ஜீவாவினால் 1966ஆல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'மல்லிகை' சஞ்சிகையாகும். மூன்றாவது கிழக்கிலிருந்து கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட "தொண்டன்" சஞ்சிகையாகும். கிழக்கிலிருந்து வெளிவந்து பொன்விழாக் காணுகின்ற ஒரே சஞ்சிகையான "தொண்டன்" கிழக்குவாழ் கத்தோலிக்க தமிழ்க் கிறிஸ்தவர்களின் தமிழ் இலக்கியப் பங்களிப்பிற்கான சான்றாதாரமாக அமைகின்றது. பொன்விழாக் காணும் தொண்டன் ஆசிரியர் குடும்பத்தினரையும், வாசகர் வட்டத்தினரையும் வாழ்த்துகின்றேன்.

பொன்விழா கண்ட தொண்டன் வரும் நாட்களில் வைரவிழா, பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழாவென விழாக்கண்டு தமிழ்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

---

**அருட்பணி. A.A. நவரெத்தினம்**
**(நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை.

## உன் புகழ் ஓங்கட்டும்!

ஐம்பது ஆண்டுகள்
நடைபோட்ட
ஜாம்பவான் நீரையா!
தொண்டன்!
கம்பீரமான பெயர்!

மறைபரப்புதலுக்கு
தொண்டாற்றும் தொண்டனே
இந்த உலகிலே
நிலவு வலம் வரும் வரை
நிலைத்திருக்குமையா உம் புகழ்!
உம் புகழ் ஓங்கட்டும்!

கலைக்கோட்டன்
அ. இருதயநாதன்



1969 Feb



2019 Feb



# குறைவின்றி வாழ்க நீடே!



- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

**பொ**ன்விழா நிறைவில் பூத்துப்
பொலிந்திடும் மலராம் 'தொண்டன்"
மன்னவர் தமிழினா லெம்
மடியிலே மணக்கின் றானே!
இன்னருள் மாதா, இயேசு
இணைந்தருள் புரிவ தாலும்
கன்னலாய்க் கனியின் சாறாய்க்
கலந்தினிக் கின்றான் பேறாய்!

எந்தமிழ்த் தாயின் பிள்ளை
இணையிலா வாச முல்லை
சுந்தரப் படையலாகச்
சுவை பல சுமந்து வந்தெம்
சிந்தையை நிறைப்பதற்கே
திறன்மிகு வகையில் மெத்தச்
சந்தன வாசம் வீசத்
தான் சுமந்தருள் கின்றானே!

இன்மொழி, இமயந் தொட்ட
எம்முயிர்ச் செம் மொழியால்
நன்மைகள் சொரியும் நல்ல
நவ நவப் படையல் ஏந்தி
இன்பனாய்த் திகழும் காட்சி
இவன் புகழ்த் திருவின் சாட்சி
நன்மைகள் இதயத்திற்குள்
நயம்படச் சுரக்கச் செய்வான் ....

தாய் மொழித் தவத்தின் பேறாய்
தழைத்திட வேண்டும் இன்னும்
தூய நற்றொண்டன் சீர்மைத்
தொடர்பணி எங்கள் மண்ணில்
நேயத்தை, வாழும் மக்கள்
நெஞ்சத்தில் அன்பின் ஊற்றைப்
பாயச் செய் துலக மெங்கும்
பாராட்டைப் பெறுதல் வேண்டும்!

பாவத்தின் இருளில் மூழ்கிப்
பகைத்திட்ட வையந் தன்னைத்
தீபம்போல் அன்பை ஏந்தித்
திருந்திடச் செய்ய வந்த
தேவனாம் எங்கள் இயேசு
திருமகன் புகழைப் பாடிக்
கூவிடும் குயிலாய்த் தொண்டன்
குறைவின்றி வாழ்க நீடே....!





# வாசிப்பில் வளர
## நூல்களை நேசியுங்கள்

08

மாவீரன் பகத்சிங் தூக்குத் தண்டனைக் கைதியாக சிறை வைக்கப்பட்டிருந்தான். தண்டனை நிறைவேற்றும் நாள் வந்தது. அன்றும் ஆர்வத்தோடு ஒரு நூலைப் படித்துக்கொண்டிருந்தான். அது லெனின் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஒரு நூல்.

தண்டனையை நிறைவேற்ற சிறைக் காவலர்கள் வந்து பகத்சிங்கை அழைத்தார்கள். அப்போது பகத்சிங், "தயவுசெய்து ஐந்து நிமிடங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்! இங்கே, ஒரு புரட்சியாளன் இன்னுமொரு புரட்சியாளனோடு உரையாடிக் கொண்டிருக்கிறான்...!" என்றானாம்.

இதனால்தானோ என்னவோ, 'துப்பாக்கிகளைவிட பயங்கரமான ஆயுதங்கள் நூல்கள்' என்றார் மாட்டின் லூதர் கிங்.

'அணுகுண்டு ஒருமுறைதான் வெடிக்கும்: நல்ல நூல்கள்பக்கத்திற்குப் பக்கம் வெடிக்கும்' என்றார் கால் மாக்ஸ்.

'நல்ல நூல்கள் சிந்தனை நிரம்பிய பீரங்கிகள்' என்றார் மாண்டேயின்.

ஆக, நல்ல நூல்களின் வாசிப்பு வாசகர்களை மிக உயர்ந்த இலக்குகளை அடையத் தூண்டுவதைப் பலருடைய வாழ்க்கை அனுபவங்களில் இருந்து பார்க்கலாம்.

இவ்வுலகத்தில் வாழ்ந்த பல பெரியவர்களை, அறிஞர்களை, தொண்டர்களை அறிந்துகொள்வதற்கு மிகவும் உதவியாக இருப்பது அவர்கள் எழுதிய அல்லது அவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் ஆகும்.

அவ்வகையில் நூல்கள் காலங்களைக் கடந்தும் பேசப்படுபவை. நூலை எழுதியவரோ அல்லது


● செ. அன்புராசா அடிகள்

அமைதித் தென்றல், முல்லைத்தீவு, அதிர்வுகள் – 02


யாரைக் குறித்து எழுதப்பட்டதோ அவர் உயிருடன் இல்லாது போனாலும் நூலைப் படிப்பவர்க்கு அந்நபரை உயிரோடு படம் பிடித்துக் காட்டும் ஒப்பற்ற ஓவியமாக நூல்கள் விளங்குகின்றன.

**புத்தகக் கடைகளைவிட உடுப்புக் கடைகளே அதிகம் :**

நல்ல நூல்களை விலைகொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும் என்ற உணர்வு முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் இக்காலத்தில் குறைந்து வருவதை அவதானிக்கலாம். ஒருவர் ஒரு மாதத்தில் எத்தனை நூல்களை விலைகொடுத்தோ அல்லது இரவலாகவோ வாங்கிப் படிக்கிறார் என்பதைக் கணக்கிட்டால் மேற்சொன்ன அவதானிப்பை மேலும் உறுதிப்படுத்தலாம்.

இன்று புத்தகக் கடைகளைவிட உடுப்புக் கடைகளிலேதான் மக்கள் நிரம்பி வழிகின்றனர். புத்தகக் கடைகள் கேட்பாரற்று கிடப்பில் கிடக்கின்றன. வாசிப்பில் இன்னும் வாசனையுள்ள சிலர் புத்தகக் கடைகளுக்குள் நுழைந்தால், "கடை மாறி அங்கு செல்கிறார்களோ?" என்று எண்ணுபவர்களே அதிகம் உள்ளனர்.

**பரிசுப் பொருளாக நூல்கள் :**

பரிசுப் பொருளாக நூல்களை வாங்கும் பழக்கமோ, பரிசுப் பொருளாக நூல்களைக் கொடுக்கும் கலாசாரமோ நம்மிடையே மிகமிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது.


அப்படி யாராவது நூல்களைப் பரிசாகக் கொடுத்துவிட்டால் அவற்றை வேண்டாத பொருளாகப் பார்க்கின்ற நிலைமையே நிலவுகிறது. பரிசுப் பொருளாக நூல்களை வாங்கும் அல்லது

கொடுக்கும் கலாசாரம் மேற்குலகத்தவரிடையேதான் மிக அதிகளவில் காணப்படுகின்றது.

விருந்தினர்களாகச் செல்கின்றபோது சிறுவர்களுக்கு 'மிக்ச'ரையும், பொரியல்களையும் அதாவது, மரவள்ளிப் பொரியல், கடலைப் பொரியல் போன்றவற்றையும், தீன் பண்டங்களையும் அளவுக்கதிகமாக வாங்கிக் கொடுத்து 'அல்சர்'ரையும், 'டயபெற்றிஸ்' சையும் பரிசளிக்காமல் பயனுள்ள நூல்களைப் பரிசளித்துப் புதிய கலாசாரத்தைத் தோற்றுவிக்க முன்வரவேண்டும்.

அறிவை வளர்க்கும், சிந்தனையைத் தூண்டும், நம்பிக்கையை உருவாக்கும், நம்மை வாழ வைக்கும், வாழ்வுக்கான வழியைக் காட்டும் நூல்களைப் பரிசளிக்கும் கலாசாரத்தை உருவாக்க பெற்றோர், பெரியோர், பாடசாலைகள் ஏனைய கல்வி நிறுவனங்கள், விழாக்களை ஏற்பாடு செய்வோர், பரிசளிப்போர் முன்வரவேண்டும்.

மறுதலையாக தற்போது வளர்ந்துவரும் நடைமுறையைப் போன்று வளரும் பிள்ளைகளைச் சீரழிக்கும் தொடர்பு சாதனங்களைப் பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து பரிசளிப்பதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.




## வினா விடைப் போட்டி - இல 18

### சரியான விடைகள்

1. குருநானக்
2. "பீட்டா எரித்ரோசின்"
3. இதயத்திலிருந்து செபித்தல், நற்கருணை, திருவிவிலியம், நோன்பிருத்தல், மாதமொருமுறை நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தல்.
4. பூண்டு : தினமும் 4 பூண்டு பற்களை மென்று தின்றால் பூண்டில் உள்ள அலிஸின் என்ற ஆண்டி ஆக்ஸ்டென்ட் உடலில் தங்கி, கேன்சரை உருவாக்கும் ஃபிரிரெடிகல் என்ற தீங்கான செல்களை வெளியேற்ற உதவும் நியூட்ரிசின்களை உடலில் அதிகரித்து உடலை நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டதாக மாற்றுகிறது.
5. திருமுனைப்பாடி நாட்டில் சன்யூரில் - வீர ராகவாச்சாரியார்
6. "எக்லேசியா" : அழைக்கப்பட்டவர்கள் ஒன்று கூடுதல்
7. "உலக வறுமை ஒழிப்பு தினம்"
8. Grace - அருள்
   Faith - விசுவாசம்
   Response - அவரின் பதில்
9. பகவத்கீதை
10. "இறைவா உமக்கே புகழ்"

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

- P. கேயூஸ்,
  இல. 16/16, வெயிலி குறுக்கு வீதி
  மட்டக்களப்பு.
- V. மாக்கிறேற்,
  இல. 48, உடையார் வீதி,
  மட்டக்களப்பு.
- பே. நொக்சிறிமன்,
  இல. 54, 7ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு.




## துயர்க்காட்டில்

தேர்தல் விழா ஆரம்பம் நாட்டில்
திக்கெல்லாம் பொய்முழுங்கும் ரோட்டில்
யார் வந்தென்! ஏழையர்தம்
தீராத் துயர் தொடராய்ப்
போர் நடத்தும் மக்கள் துயர்க் காட்டில்

# என்னங்க...!
# என்னங்க...!



என்னங்க... என்னங்க....
ம்!
என்ன ஆதாம் ஐயாக்கு
இன்னிக்கு மூட் சரியில்லப்போல ....!

சும்மா போ ஏவாள்!
யோசியாம என்னாண்டு
உன்ட கதய கேட்டு
எல்லாத்தையும் இழந்தம்

என்ன டார்லிங்
*FLASH BACK* போட்டு போட்டு
அதயே நினச்சிட்டு கிடக்கிறிங்க...
இலட்சோப இலட்சம் கோடானு கோடி
வருஷங்கள் கழிஞ்சிற்றில்ல
சும்மா என்ர மடியில கிடக்காம
எட்டிப் பாருங்க!
இன்றைய *GLOBAL SIYUATION*
*BOW* அந்த மாதிரி
என்னதான் சும்மா
சும்மா இருக்க விடமாட்டேங்கிற




கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

அடி ஆத்தே என்னப்பா இது!
*WHATS APP, FACE BOOK*
*SKYPE, E MAIL*

அதுதானுங்க இந்த சனங்கள்
என்னத்துக்கோ *USE* பண்ணுதுகள்
இத! இத
நற்செய்தி அறிவிப்புக்கு *USE* பண்ணா
நம்ம ஜீஸஸ்ர மனசு குளிருமில்ல...!

அப்பா கோபமாகப் பையனிடம் கேட்டார்,
"ஏண்டா.... எல்லாப் பாடத்திலேயும் சைபர் வாங்கியிருக்கே"

"அப்பா, அது சைபர் இல்லேப்பா, என் மார்க்கையெல்லாம்
பார்த்து டீச்சர் "ஓ" போட்டிருக்காங்க"



# *Hello....*



திரு.தேவ அலோசியஸ்

# நான் தொண்டன் பேசுகிறேன் ....

**எனது பிறப்பு :** 1969, பெப்ரவரி
**எனது பிறந்த இடம் :**
சமூகத் தொடர்பு நிலையம் - மட்டக்களப்பு
**இன்று வயது :** ஐம்பது

இளமை குறையக் குறைய, அழகும், செழுமையும் குறைந்து, பொலிவிழந்து மூலையில் ஒதுங்கிவிட, நான் என்ன மனிதனா? தொண்டன்டா...

சேவை செய்பவன் சேவகன். இலக்கியச் சேவையே என் பிரதான கலைச்சேவை. கலைஞர்களுக்கு இளமை ஒரு வரம். எனக்கும் அந்த வரம் கிடைத்துள்ளது. என்னுடைய தற்போதைய இதழ்கள் தான் அதற்கு ஆதாரங்கள். நான் செழுமையாக இருக்கிறேனாம். நான் பொலிவாய் இருக்கிறேனாம். இளமையோடு இருக்கிறேனாம். இவையெல்லாம் மற்றவர்கள் என்னை கைகளில் ஏந்தும்போது கூறும் வார்த்தைகள்.

என்னைப் போன்ற எத்தனையோபேர், எனக்குப் பின்னே தோன்றியிருக்கிறார்கள். ஆனால் சில காலங்களிலேயே அவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். காலம் அவர்களை மறக்கடித்திருக்கிறது. என்னை மறக்காதிருக்கிறது. இதற்கு ஏதோ காரணம் இருக்கத்தானே வேணும்...

ஆமாம். எனக்கான அங்கீகாரமும், எனக்கான அந்தஸ்தையும் வாசகர்களான நீங்கள்தானே எனக்கு வழங்கி வருகிறீர்கள். உங்களால்தானே எனக்கு இன்று ஐம்பது வயது. உங்களால்தானே எனக்கு இன்று பொன்விழா. இதில் நான் மகிழ்வடைகிறேன் என்றால் நீங்களும் மகிழத்தானே வேண்டும். வாசகன் இல்லையென்றால் நான் மட்டுமில்லை, இலக்கியமோ, நாவலோ, கவிதைகளோ, பத்திரிகைகளோ எதுவுமே நிலைத்திருக்க முடியாது. தழைத்திருக்க முடியாது. தலை தூக்கியிருக்க முடியாது. பொன்விழாக் காண வைத்த உங்களுக்குத்தான் நன்றிகள்.

என்னை உருவாக்க எண்ணியவர்கள், என்னை கருவாக வடித்தவர்கள், என்னை வடிவமாக்கிய வர்கள், எனக்குப் பெயர் சூட்டியவர்கள், அதன் மூலம் பெருமை சேர்த்தவர்கள், என்னை பொதுமையாக்கியவர்கள், என்னைப் பொக்கிசமாக்கியவர்கள், கடமையென்றெண்ணி இதழ் ஆசிரியர்கள் ஆனவர்கள், அச்சுக்களைக் கோர்த்தவர்கள், அச்சகமாய் ஆனவர்கள், ஆண்டாண்டு காலமாக ஆக்கங்களை வழங்கியோர்கள் இத்தனை பேர்களா எந்நன்றிக்கு உரியவர்கள்??? இல்லை. இன்னும் பலர் உண்டு. அனைவரையும் எண்ணியே இந்த என் இதழ் - நன்றி இதழாய் விரிக்கிறேன்...

தொடர்ந்தும் நான்
வாழ்ந்திட,
உங்களை
வேண்டி,
என்
இதயம்
திறக்கிறேன்.




**இப்படிக்கு**
**உங்கள்**
**தொண்டன்**

# பொன்விழா வாழ்த்து



■ கவிபுரிச்சீலன் (கனடாவில் இருந்து)

செம்மொழியாம் எம் தாய்மொழிக்கு
சீரான சேவை செய்து ஓய்வில்லாமல்
உழைத்த உயர் தொண்டனுக்கு
ஒராயிரம் வாழ்த்துயக்கள்

ஞானம் தரும் மறை விவிலியம் பரப்ப
இத்தரணி மேதினியில் எத்திக்கும் சென்றடைய
எண்ணில் அடங்கா தொண்டு செய்த
எம் அருமைத் தொண்டன் வாழியவே

மலர்வேந்தன் சுமந்த காலத்தில் நானும்
பயணித்து உறவுகொண்டேன்
இலக்கிய மஞ்சரியோடு கவிதையென
உள்ளம் மகிழ்ந்து உலா வந்தேன்

விவிலியமும் வாழ்வியலும் கற்பனையும் காவியமும்
கவிதையும் கட்டுரையும் கடி துணுக்குகளும்
சிறார் முதல் பெரியோர் வரை படித்து மகிழ
பல்சுவையாய் அள்ளி அள்ளி
அழகு சேர்த்த அருமைத்தொண்டனடா நீ

மாதம் ஒருமுறையும் மலர்ந்து நீ
மறைமாவட்ட பணிசெய்த
நற்றமிழ் தொண்டனே நீடுழீ வாழியவே
முத்தமிழும் உனை வாழ்த்தும்
வித்தகனே நின்பணி வென்றிடும்! பாரில்

பொன்விழா காணும் நீ புகழோங்கி
நீடுழி வாழ்கவென வாழ்த்துச்சொல்ல
எப்பேறு யாம் பெற்றோம் பரம்பொருளே
காலமெல்லாம் தமிழ்க்கதோலிக்க மக்களுக்கான
உன்தொண்டு கரைபுரண்டு திரண்டு ஓடட்டும்

உன் பொன்விழா தினத்தினிலே
என் வாழ்த்தொலி பாமாலை சொரிகின்றேன்
தொண்டனுன் தமிழ்ப்பணி சிறக்கட்டும் செல்வனே தமிழ்மறை
வளர ஆண்டவர் அருளாசீர் என்றும் நிலைக்கட்டும்

# குப்பையிலும் கேவலம்

கடுக்கதை – 103



- பற்றி

அன்ரன் தன் பிள்ளைகளுடன் தொலைக் காட்சியில் செய்தி பார்த்துக்கொண்டிருந்தார். செய்திகளில் தேர்தலே பிரதான விடயமாக காணப் பட்டது. . அன்ரனின் பிள்ளைகள் செய்திகளை அவதானத்துடன் நோக்கிக் கொண்டிருந்தனர்.

வெள்ளைக் கட்சியில் வேட்பாளர் மிகவும் ஆவேசத்துடன் தனது கடந்தகால செயற்பாடுக ளைப் பற்றியும், எதிர்காலத்தில் செய்யவிருக்கும் செயற்பாடுகள் பற்றியும் கூறிக்கொண்டிருந்தார்.

அன்ரனின் மகன் சொன்னான், "அப்பா .... இவர்ர காலத்திலதானே நம்மட மாமாவ சிவப்பு வேனில கடத்தினவங்க.... இருபத்தேழு வருசமா யித்து .... இன்னும் மாமாவிற்கு என்ன நடந்த தெண்டு தெரியல ...."

அன்ரனின் இளைய மகள், "அண்ணாச்சி .... இந்தாள நம்மட மாநகரசபை குப்ப லொறியிலதான் ஏத்தியனுப்பனும்" என்றாள்.

அதற்கு அண்ணன்காரன் பின்வருமாறு சொன்னான்,

"அது சரிபட்டு வராது .... குப்ப லொறியில தரமான குப்பைகள மட்டும்தான் ஏத்துவாங்க .... இவங்கள ஏத்தமாட்டாங்க...."

தன் பிள்ளைகளின் உரையாடல்களைக் கேட்டு அன்ரன் ஆழ்ந்த சிந்தனைவயப்பட்டார். இள ரத்தங்கள் துடிக்கின்றன; அவதானமாக இருக்க வேண்டும். ■



# இன்னுமா செபமாலை...?

"தொண்டன்" பொன்விழாவை முன்னிட்டு இடம்பெற்ற கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை

விஞ்ஞான யுகத்தின்
விந்தைகள் மலிந்து
மெய்ஞான கீர்த்திகள்
மெய்யன்று போனபின்
இன்னுமா செபமாலை...?

இணையத்தில் இளையவர்
இணைந்தே இளமையை
தொலைத்து வருந்தி
தொன்மைகள் போனபின்
இன்னுமா செபமாலை...?

ஆலயம் தனில் குண்டுகள் பொழிய
ஆன்மாக்கள் குருதியில் தோய
நெஞ்சம் பரிதவித்து
நெருப்பிலே வெந்த பின்
இன்னுமா செபமாலை...?

ஆம், இன்னும் வேண்டும் செபமாலை
ஆகாயம் தொடும்வரை
பாரெங்கும் முழங்கட்டும் - எம்
பாவங்கள் அகலட்டும்
அன்னையவள் பரிந்துரையால்.

இன்னும் ஏன் தயக்கம்
இடிபோல் துயர் தொடர்ந்த போதும்
அவை பனிபோல் மறைந்திட
அன்புக் கயிறு உதவிடும் - அது
அன்னையவள் செபமாலை!.


– எஸ். குமாரராசா

# ஏதோ சொல்லணும்னு தோணிச்சு!! 02



● அருட்பணி. P. ரமேஷ் கிறிஸ்டி





ஓர் ஊர்ல ஒரு விஞ்ஞானி இருந்தார். அவர்தான் தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த வர். அவர் பெயர் ஹோ. அவருக்கு புரியாத ஒரு காரியம் இருந்தது. தையல் ஊசியின் கூரான முனையில் நூலை செலுத்த வேண்டும். ஆனால் அது எப்படியென்று தெரியாமல் மிகவும் குழம்பிப் போயிருந்தார். இரவு பகலாக அதை குறித்து யோசித்துக்கொண்டு இருந்தார். ஒரு நாள் இரவு தூ க்கத்தில் ஒரு கனவு கண்டார். அந்த கனவில் மலைவாசிகள் கூட்டம் இவரை கடத்திக் கொண்டு போய் ஒரு மரத்தோடு கட்டி வைத்தார்கள். அப்போது அந்தக் கூட்டத்தின் ராஜா வந்து அவரைப் பாத்துச் சொல்கிறார், "பொழுது விடியிறதுக்குள்ள தையலூசி முனையில நீ நூலக் கோர்த்தாகணும். அதற்கான வழியை நீ எப்படியும் கண்டுபிடிச்சா கணும். அப்படி இல்லண்ணா உன்னை நெருப்பில் போட்டு எரிச்சிடுவேன்". இரவு முழுவதும் யோசிக்கிறார் எதுவுமே தோணவில்லை. பொழுது விடியும் நேரத்தில், கூட்டத்தில் இருந்து ஒருத்தன் ஈட்டி ஒன்றை எடுத்து அவர் கண்ணைக் குத்துவதற்கு நேராக ஓடி வருகிறான். அவன் கொண்டுவந்த ஈட்டியில் முன் பக்கத்தில் கூரான பகுதியில் ஒரு துவாரம் இருந்தது. அதைப் பார்த்ததும் இதைத்தானே இவ்வளவு நாளாக யோசித்துக்கொண்டு இருந்தேன். தையலூசி முனையில் ஒரு துவாரத்தைப் போட்டு ஒரு நூலைச் செலுத்தினால் தையல் மெசின் ரெடி.

வாழ்க்கையில் முடியாதது என்று எதுவும் கிடையாது. எந்தவொரு காரியத்தையும் உறுதியாக யோசித்தோமேயானால் அதைப் பற்றிய சிந்தனை நம் ஆழ் மனதிற்குப் போய் அதற்கான தெளிவான பதில் நமக்குத் கிடைத்துவிடும். ஏனென் றால் நாம் யாரும் சாதாரண படைப்பு கிடையாது. நம்மைப் படைத்தது சகல வல்லமையுள்ள கடவுள். அவருடைய சாயலைத் தாங்கி இருக்கின்றதால் அவரைப் போல் நம்மாலும் எல்லாம் சாதிக்க முடியும். சாதனை என்பது சும்மாவும் வந்துவிடாது. அதற்கு கடும் உழைப்பு வேண்டும். அதனால் வருகின்ற சவால்களையும், வேதனை களையும் தாங்கிக்கொள்ள வேண்டும். துளைகளைத் தாங்கும் மூங்கில்தான் புல்லாங்குழல் ஆகிறது. உடைக்கப் படும் கல்தான் சிற்பமாக உருவாகிறது. வலி படாத வாழ்வில் வசந்தங்கள் சேராது. சாதனை வேண்டுமானால் சோதனை ஏற்றுத்தான் ஆகவேண்டும். சுத்தமான வெள்ளி வேண்டுமானால் அதனை நெருப்பிலிட்டு சுட வேண்டும். ஒரு தடவை இரண்டு தடவையல்ல, ஏழு தடவை அகோர வெப்பத்தில்



# மனித உணர்வுகளின் கார்த்திகை

– பீ.ஜ. கெடி பொன்கலன்

கார்த்திகை வந்தாலே மனது கனக்கின்றது.
சேர்ந்திட்ட சுற்றத்தவர் நெஞ்சம் பதைக்கின்றது
கோர்த்துவிட்ட வன்முறையினால் தேகமும் சிலிர்க்கின்றது.
வார்த்துவிட்ட நெருப்பாய் இதயமும் துடிக்கின்றது – உயிரை
ஈர்த்துவிட்ட உள்ளங்கள் எல்லாம் அழுகின்றது – இதனைச்
சீர்செய்திட முடியாமல் பலரது முகங்கள் குமுறுகின்றதே!

சிறகொடிந்த பறவையினைப்போல் நம்முறவுகளின்
இறப்பின் இழப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் – ஏன்
பிறந்தோம்? எதற்காக வாழ்கின்றோமெனத் தெரியாமல்
மறக்கவும் முடியாமல், மனதினை தேற்றவுமியலாமல்
பறக்கின்ற பதைக்கின்ற உள்ளங்களெல்லாம் கூடவே,
கறக்கின்ற பாலின் வெண்மையாய் உடையணிந்துள்ளார்களே!

எம்முறையுமில்லா எதிர்மறை எண்ணங்களெல்லாம்
இம்முறை கல்லறைகளில் நடக்கின்றதேயென்றே
பன்முறை காயப்பட்டு தன்னுயிரையீந்த யேசுவைப்போல,
மும்முறை மறுதலித்த பேதுருவைப்போலல்லாது – நாமும்
முதன்முறை மன்னிப்போம் மறப்பொமெனும் மறைவழியே
வன்முறையைக் கைவிட்டு விடவேண்டுமென வேண்டுவோமே!

கண்ணீரில் மிதக்கும் மக்களே கலங்காதீர்கள் ஏனெனில்
குண்டுவெடிப்பில் மாண்ட நம்முறவுகளை பெற்றவர்களையும்
மண்ணில் மடிந்த ஏனையவர்களையும் நினைத்திடுங்கள்
விண்ணில் அவர்களையெல்லாம் வேதசாட்சிகளாகிவிட்டார்களே
புண்ணியங்கள் கோடிக் காத்துக் கிடக்கின்றனவே உங்களுக்காகவே
உண்மையான கார்த்திகையிதுவென கல்லறைகளும் இயம்புகின்றனவே!

வார்த்தாக வேண்டும். ஏழாவது தடவை வார்த்தவன் முகம் வெள்ளியில் ஜொலிக்கும் கண்ணாடி போல் அவன் விம்பத்தை தொடுக்கச் செய்யும். நம்மை வலிகளால் வார்ப்பது கடவுள். எதற்காகவென்றால் தன் முகம் எம்மில் பிரதிபலிப்பதற்கு. அடுத்த தடவை வலிப்பதை உணர்ந்தால் மனதில் பதித்துக் கொள்ளுங்கள். உங்களை வார்க்கும் கடவுள் அருகில் தான் இருக்கின்றார். நீங்கள் எத்தனை தடவை எரிக்கப்பட்டாலும் உங்களோடு சேர்ந்து கடவுளின் கையும்தான் உங்களுக்காக சூட்டைத் தாங்கிக் கொள்கிறது. அவர் எப்போதும் உங்களுக் காகத் தோள் கொடுக்கிறார். முடியாத காரியத்தை முடிக்கப் பண்ண வேண்டுமா? அவரோடு சேர்ந்தி ருங்கள். எல்லாம் சாத்திதயமாகும்.

என்ன நான் சொல்றது. புரிஞ்சிருக்குமென்று நினைக்கிறேன்.

சும்மா சொல்லணும்னு தோணுச்சு. ■




ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவிட்டது. பிரச்சாரங்களும் ஏட்டிக்குப் போட்டியாக இடம்பெறுகின்றன: வாக்குறுதிகளும் அள்ளி வீசப்படுகின்றன. ஒருவர் 1000 ரூபா சம்பளம் என்றால் மற்றவர் 1500 ரூபா சம்பளம் என்கிறார். வரிகளே இல்லாமல் செய்யப்படும் என்கிறார் ஒருவர்: இலவசமாக உரம் என்கிறார் மற்றவர். உண்மையில் சாத்தியப்படும் விடயங்களை இவர்கள் சொல்கின்றார்களா என்பது மக்கள் ஆராயவேண்டியவொன்று.

35 பேர் போட்டியிட்டாலும் இருவர்தான் நேரடிப் போட்டியாளர்கள் என்பதே உண்மை. இருவர் பக்கமும் கட்சித் தாவல்கள் மாறி, மாறி நடைபெறுகின்றன. முன்பு சொன்னதுபோல் தமிழ், முஸ்லிம் மக்களில் அனேகம் பேர் யார் வரவேண்டும் என்பதனை விட யார் வரக் கூடாது என்பதில் கவனமாக உள்ளார்கள் என்றே தெரியவருகின்றது.

தங்கள் அரசியல் வாழ்வுக்கு கொழுகொம்பு இல்லையென்று அவதிப்படும் சில பிராந்திய அரசியல்வாதிகள், மக்களால் ஒதுக்கப்பட்ட வர்கள், பத்திரிகை மாநாடு கூட்டி "பம்மாத்து" காட்டுகின்றார்கள். இவர்கள் சொன்னபடி செய்வதற்கு மக்கள் என்ன அடிமைகளா? கையில் "இயந்திர உபகரணங்கள்" வைத்திருந்த போது பிரமாண்டமான விடுதலை வீரர்களாக, கனவு நாயகர்களாக காணப்பட்டவர்கள் ஏன் சோரம் போய்விட்டார்கள்? "தலைவனின்" மரியாதைக்கும் களங்கள் கற்பித்துவிட்டார்கள். அதேவேளை இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். சில தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகள் அன்று தொடக்கம் இன்றுவரை கூடு பாயாமல் அதேபிடியில் நிற்கின்றார்கள். அவர்கள் செய்வது சரியோ, தவறோ தங்கள் கூட்டணியில் இருந்து பிரிவதில்லை. அவர்கள் சார்ந்த அணியினர் ஆட்சிபீடம் ஏறினாலும் அதே நிலைப்பாடுதான்; ஆட்சியை இழந்தாலும் அதே நிலைப்பாடுதான். இவர்கள் ஒருவகையில் அரசியல் கனவான்கள்தாம்.

ஆனால், "பாம்பென்று தெரிந்தும்" பால் வார்ப்பது தான்" ஏனென்று புரியவில்லை.

அரசியல்வாதிகளின் குடுமிகள் வல்லரசுகள், இந்தியா போன்ற நாடுகளின் கைகளிலும், பௌத்த குரவர்களின் கைகளிலும் ஆயுத வியாபாரிகளின் கைகளிலும் இருப்பதென்னவோ உண்மைதான்: என்றாலும் துணிச்சலும் தன்னம்பிக்கையும் வேண்டு மல்லவா....?

பெயர் பலகைகளையும் பிரச்சினையாக்குகின் றார்கள். எல்லாம் அரசியல் இலாபம் தேடித்தான்.

தென்னிந்தியாவில் "ஏழுபேரின்" விடுதலையும் கவனரால் தடைபட்டுவிட்டது. எல்லாம் "பிராமண வர்க்கத்தினரின் முடிவில்தான் உள்ளது. சு. சுவாமியின் அறிக்கைகள் ஆத்திரத்தையும், நகைப்பையும் உண்டாக்குகின்றன. மேல் தட்டுவர்க்க வெளிப்பாடு, எங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாது இருக்கலாம் அல்லவா....?

நம்மில் சிலருக்கு இதிலொன்றும் அக்கறை யில்லை; இராவணன் ஆண்டாலும் சரிதான், இராமன் ஆண்டாலும் சரிதான். அவர்களுக்கு "பிகிலும்", "கைதியும்" வந்தால் சரி.

வாக்காளர்களுக்கு ஒரு வேண்டுகோள். வாக்களிக்கும் உரிமை உங்களதுதான்; யாருக்கு

→

# பொன் விழாக் காணும்

சாமசிறி தேசமானிய
P.D.A. ஜெயக்குமார்



# சமூகத் தொடர்பு நிலையம்

நல்ல பண்புள்ளவரை காண்போம் - அவர்தம்
நல்லெண்ணங்கள் கண்டு மகிழ்வோம்
கள்ளமில்லா நெஞ்சுடையானவன்தான்
களங்கமில்லா தன்னலமற்ற தொண்டன்
உள்ளத்தில் இரக்கக்குணம் இருந்தாற் போதும்
உண்மையிலே வந்திடும் சமூகத் தொண்டு
இல்லம் தோறும் சென்று பணியாற்றும் பண்பு
அதுவன்றோ நாம் புரியும் சமூகத் தொடர்பு

இரக்கமென்பது தானே வருவது சொல்லிவருவதில்லை
ஈகையென்பதும் தானே வருவது வேறு சொல்லவில்லை
மறக்கமுடியாச் சம்பங்கள் அத்தனையும்
மன்னித்து மறப்பதுதான் ஆண்டவர் சொன்னது
துறக்கமுடியாதவை யெல்லாம் துறந்து தம் பணியினை
துல்லியப் பற்றுடன் செய்யும் மாந்தர் நாமம்
சிறக்க நாமும் எம் பங்கினை வழங்கி
செய்நன்றி மறவாமல் தொடர்வோம் பணிதனை

இறையேசுவின் ஒப்பற்ற போதனையால் அவர்
இரக்கமுள்ளவர் பேறுபெற்றவர் என்றாரே
அரிதாக தேங்கிநிற்கும் எம் இரக்கத்தில் மட்டுமே
அன்பும் அரவணைப்பும் மாந்தர்க்குண்டல்லவோ
சமூகப் பணியே இறைபணியென்றுரைக்க - எம்
மறைமாநிலம் காட்டும் அளவற்ற சிந்தனை எத்தனை
தொண்டன், வானொலி, இலக்கிய வட்டமென
தொண்டர்கள் நாம் புரிந்திடும் சேவைகள்தான் என்ன

தாய் தந்தையின்றி தெருவினில் திரியும் குழந்தைகளை
தத்தெடுத்து வளர்க்கின்ற பண்புதான் என்ன
மேய்ப்பனில்லா முதியவரெல்லாம் தேறிவாழவேண்டுமென
வாழும் இல்லமமைத்து பராமரித்திடும் பண்புதானென்ன
நேயமின்றி இருளில் வாழும் மக்களுக்கு
நயமுடன் இரங்கி ஒளியை வழங்கும் பண்புதானென்ன
காயங்களால் அல்லலுற்று அலைபவரை சுமந்திடும் துறவிகள்
கனிவுடன் ஆற்றும் சேவையின் பண்புதானென்ன

சமூகத்தொடர்பு சாதனங்களின்று - நம்மை
சாக்கடையிலிருந்து தூக்கி நிலைநிறுத்துகின்றன
சர்வமத சிந்தனைகள் எம்மை தங்குதடையின்றி
சீரான வாழ்வு வாழ வழி சமைக்கின்றன
நற்சிந்தனை கூறி, நற்செய்தி நாடகங்கள் தந்து
நலமுடன் நாம் வாழ்ந்திட நயமுடன் மறை பரப்பிட
மட்டுநகர் மறை மாநில சமூகத் தொடர்பு நிலையமது
மறைமாநில ஆயரின் வழித்துணையுடன் ஆசீர்பெற்று
ஆற்றலின் ஆண்டவரை நாம் போற்றி புகழ்ந்து இன்று
ஐம்பதாவது ஆண்டினில் ஆழக்கால் பதித்து நிற்கும்
தொண்டுகள் புரிந்திடும் 'தொண்டன்' பத்திரிகையுடன்
தொண்டர்கள் நாமிணைந்து வாழ்த்துகின்றோம்
வாழ்க தமிழ்! வளர்க எம் சமூகப் பணி!!

---

→ வாக்களிப்பது என்று தீர்மானிப்பதும் நீங்கள்தான் - அது உங்கள் சுதந்திரம்.

எங்களை அடிமையாக்காமல் வீடுகளை விட்டுத் துரத்தாமல் - இருக்கும் ஒருவ ரைத் தேர்வு செய்தால் சரிதான்.

● குடிமகன்



# சிறியது ... அழகானது!

"சிறியது அழகானது" (Small is beautiful") என்பது புகழ்பூத்த எழுத்தாளரும், சிந்தனை வாதியுமான அருந்ததி றோயின் கூற்று! தொண்டன் முன்பு அட்டைப்படம் தொடக்கம் இறுதிப் பக்கம் ஈறாக ஒருவகை எளிமையின் சாந்தத்தை புலப்படுத்தி நின்றது. காலச் சூழலுக்கு மேற்ற ஆசிரியர் தலையங்கங்கள், "இறைவாக்கு" கருத்தைக் கவரும் கவிதைகள் கனகாத்திரமான கட்டுரைகள், மாணவர் பக்கம், தொடர்கதை, தொடர் காவியங்கள், வாசகர் மடல்கள் முதலா னவை இன்று கண்முன் விரிகிறது.

ஆயர் தியோகுப்பிள்ளை அடிகள் முதற் கொண்டு இன்றைய அருட்தந்தை R. பயஸ் பிரசன்னா ஈறாக பலரது வியர்வை, "சிந்தனை", உழைப்பில்தான் தொண்டன் தன் பயணம் தொடர் கின்றான். இவர்களுள் அருட்தந்தை றொஹான் அடிகளாரின் காலத்தில் தேசியத் தமிழ் ஊடகங்கள் சாதிக்காத அரசியற் சூறாவளியை உருவாக்கி கலங்கடித்த வரலாறும் இங்கு பதிவு செய்யப்பட வேண்டியதாகிறது.

"தொண்டன்" இன்னும் பந்நூறு ஆண்டு அலர்ந்து மணம் பரப்பிட இதய ஆழத்தினின்றும் வாழ்த்துமலர் தூவி இந்த என் ஞாபகக் குறிப்பை நிறைவு செய்கிறேன். எழுதி முடிக்கையில் இன்னும் எழுதாமல் விட்டது அதிகம் என்ற உணர்வே மேற்கிளம்புகிறது. அதற்கு இன்னொரு சந்தர்ப்பம் வாய்த்திட இறைவன் ஆசீர்வதிக்கட்டும்.

---

நல்வாழ்த்துக்களுடன்

முறையூர் **சந்திரசேகரன் சசீதரன்**
முதுநிலை விரிவுரையாளர்
(சமூகவியலும், மானுடவியலும்),
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## 'நான் ஒரு பாவி'

பரிசேயர் சொன்னது, 27 வார்த்தைகள். வரிதண்டுபவர் சொன்னதோ, 4 வார்த்தைகள். இருவரும் 'கடவுளே' என்ற வார்த்தையுடன் ஆரம்பித்தனர். இந்த முதல் வார்த்தையைக் கேட்டதும், இதைத் தொடரும் வார்த்தைகள், செபமாக இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், பரிசேயர் பயன்படுத்திய ஏனைய வார்த்தைகளில், அவர் சொன்னது, சுய விளம்பரம் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த சுய விளம்பரத்தில் அவர், தன்னை, பிறரோடு ஒப்பிட்டுப் பேசிய வார்த்தைகளே அதிகம் (16). வரிதண்டுபவரோ, தன்னை யாரோடும் ஒப்பிடாமல், 'தான் ஒரு பாவி' என்பதை மட்டும் நான்கு வார்த்தைகளில் கூறியுள்ளார்.

பரிசேயரின் கூற்று, இறைவனின் கவனத்தை வலுக்கட்டாயமாகத் தன்மீது திருப்ப, அவர் மேற்கொண்ட முயற்சி. சொல்லப்போனால், கடவுளின் பார்வை தன்மேல் மட்டுமே இருக்கவேண்டும் என்ற ஆவலில், பரிசேயர், கடவுளுக்கே கடிவாளம் மாட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார்.

இதற்கு மாறாக, வரிதண்டுபவர், தன்னைப்பற்றி அதிகம் பேசவில்லை. அவர் சொன்னதெல்லாம் இதுதான்: 'இறைவா, இதோ நான், இதுதான் நான், இவ்வளவுதான் நான்.' வரிதண்டுபவர் கூறிய நான்கு சொற்கள், வானத்தைப் பிளந்து, இறைவனை அடைந்தன.

பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார்.



# ரெண்டு கோழி

**ஆசிரியர்:** நான் உனக்கு முதலில் இரண்டு கோழி தருகிறேன். அடுத்து இரண்டு கோழி தருகிறேன். இப்ப உன்கிட்டே எத்தனை கோழி இருக்கும்?

**மாணவன்:** 5 இருக்கும் சார்

**ஆசிரியர்:** நல்லா கேளு ......
முதல்லே இரண்டு கோழி தர்றேன், மறுபடியும் இரண்டு தர்றேன், இப்ப உன்கிட்டே எவ்வளவு இருக்கும்?'

**மாணவன்:** 5 தான் சார்.

**ஆசிரியர் :** (பெருமூச்சு விட்டவாறு):
உஷ்.... முடியலடா. சரி, இதுக்குப் பதில் சொல்லு.... முதல்லே இரண்டு ஆப்பிள் தர்றேன். அடுத்து ரெண்டு ஆப்பிள் தர்றேன். மொத்தம் எத்தனை ஆப்பிள் இருக்கும்?

**மாணவன்:** 4 சார்.

**ஆசிரியர்:** தப்பிச்சேன்'. இப்ப கோழிக்கு வருவோம், 2 கோழி தர்றேன். பிறகு 2 கோழி தர்றேன். உன்கிட்டே மொத்தம் எத்தனை கோழி இருக்கும்?

**மாணவன்:** 5 சார்.

**ஆசிரியர்:** அடேய் லூசுப்பயலே'..
எப்படிறா 5 கோழி வரும்?

**மாணவன்:** என்கிட்டே ஏற்கனவே வீட்டில் ஒரு கோழி இருக்கு சார்.

**ஆசிரியர்:** ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ?.....

---

படித்ததில் பிடித்தது



சர்ச்சில் திருமணம் நடந்து கொண்டிருந்தது.
வந்திருந்தவர்களில் ஒரு சிறுமி, தனது அம்மாவிடம் கேட்டாள்:
"அம்மா, ஏன் கல்யாணப் பொண்ணு வெள்ளைக் கலர்லே கவுன் போட்டுருக்கு?"

"வெள்ளைக் கலர் மகிழ்ச்சிக்கு அடையாளம். இன்னைக்கு அந்த பொண்ணுக்கு வாழ்க்கையிலே சந்தோஷமான நாள் இல்லையா? அதனால்தான் வெள்ளைக்கலர் கவுன் போட்டுருக்கு"

"அப்ப, மாப்பிள்ளை ஏன் கருப்புக் கலர் கோட் சூட் போட்டுருக்காரு?"

அம்மா: ....?








# போட்டி முடிவுகள்!

**திருவிவிலியம் கற்போம் - 195 விடைகள்**

1. நோயற்றவர்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.
2. தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்றவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் நியமித்தார்.
3. விளக்கு உவமை
4. "சிறுமி உனக்குச் சொல்கிறே எழுந்திடு"
5. மாற்கு 7:6
6. திமேயுவின் மகன்
7. ஒரு தொழிலாளரின் ஒரு நாள் கூலிக்கு இணையான உரோமை வெள்ளி நாணயம்.
8. சீசருடையவை
9. இலாமிச்சை நறுமணத் தைலம்
10. மகதலா மரியாவுக்கு

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி 400/= பரிசு பெறுவோர்:**

* **ஜெ. நவீன்,**
  இல.53/22, சித்தி விநாயகர்
  குறுக்கு வீதி,
  புன்னைச்சோலை.

* **A. ஷோபித்,**
  6ம் குறுக்கு,
  திருப்பெருந்துறை.

* **K. மொனாலிசா,**
  சொமஸ்கன் இல்லம்,
  மியானி நகர், தன்னாமுனை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 146 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **ய. மெரிஷா,**
  தாழையடி,
  தன்னாமுனை.


**2ம் பரிசு - 300/=**

* **D. மில்கா,**
  மத்தியாஸ் வீதி,
  மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* **சொ. கமிய் சைமன்,**
  71, சின்ன உப்பொடை,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 20

1) எது ஒருவருக்கு சிறந்த அணிகலன் என திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
..........................................................................................

2) இலங்கை கல்வி வளர்ச்சியில் தம் மறையினை ஆர்வத்தோடு பணியாற்ற இலங்கை வந்த கத்தோலிக்க சபைகள் 2 தருக?
..........................................................................................
..........................................................................................

3) ஆங்கில இலக்கிய புகழ்பெற்ற ஷெல்லிக்கு எந்தப் பள்ளியில், என்ன பாடம் படிக்க அனுமதி கிடைக்கவில்லை?..........................................................
..........................................................................................

4) அன்னை மரியாவின் பிறப்பை மகிழ்ந்து கொண்டாட காரணம் என்ன?
..........................................................................................

5) இரவு உணவுக்குப் பிறகு நீண்ட நேரம் வெறும் வயிறாக இருப்பதால் ஏற்படும் பிரச்சினை என்ன ?
..........................................................................................
..........................................................................................

6) திருப்பலியின் இரு முக்கிய பகுதிகள் எவை? எந்த மரபிலிருந்து எடுக்கப்பட்டது?
..........................................................................................
..........................................................................................

7) நற்செய்தி அறிவிப்புப் பணியை புனித பவுலடியார் எவ்வாறு கூறுகிறார்?
..........................................................................................
..........................................................................................

8) அப்போஸ்தலிக்க பிதாக்கள் திருமுழுக்கு அளிக்கும் முறை பற்றியும், மீட்பு பெறுவதன் அவசியம் பற்றியும் எழுதியவர்கள்: ..........................................................
..........................................................................................

9) "மண்ணையும், நீரையும் ............................................................ காணும்போதெல்லாம் அவற்றில் நான் ...................................................... நினைவுகளைக் கண்டுகொண்டேன்"

10) "இசை எல்லா நாட்டு மக்களுக்கும் பொதுவான மொழி" எனக் கூறியவர் :
..........................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

பங்கு / தொ.பே.இல : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 20**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 30.11.2019




முடிவுத் திகதி

30.11.2019

## சரியான விடைகளை யோவான் நற்செய்தியிலிருந்து தெரிந்து எழுதவும்

1. "மெசியா" என்பதன் பொருள் என்ன?

.......................................................................................................................

2. "நீர் போய் உம் கணவரை இங்கே கூட்டி வாரும்" என்று இயேசு யாரிடம் கூறினார்?

.......................................................................................................................

3. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு இயேசு செய்த அரும் அடையாளத்தை கண்ட மக்கள் கூறியது என்ன?

.......................................................................................................................

.......................................................................................................................

4. விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை கல்லால் எறிய வந்தவர்களிடம் இயேசு கூறியது என்ன?

.......................................................................................................................

.......................................................................................................................

5. பார்வையற்ற மனிதன் கண்களில் சேற்றைப் பூசி எங்கு போய்க் கழுவும்படி இயேசு கூறினார்?

.......................................................................................................................

6. இயேசு யாருக்காக உள்ளங் குமுறிக் கலங்கி கண்ணீர் விட்டு அழுதார்?

.......................................................................................................................

7. "ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்?" என்று கேட்ட சீடர் யார்?

.......................................................................................................................

8. இயேசுவைக் கைது செய்ய வந்தவர்களில் பேதுரு காதை வெட்டிய பணியாளனின் பெயர் என்ன? .......................................................................

9. 'கல்தளம்" எனும் இடத்திற்கு எபிரேய மொழி பெயர் என்ன?

.......................................................................................................................

10. இயேசுவை அறைந்த சிலுவையின் மீது பிலாத்து வைத்த குற்ற அறிக்கையில் என்ன எழுதப்பட்டிருந்தது?

.......................................................................................................................

பெயர் : .......................................................

முகவரி : .......................................................

.......................................................

.......................................................

பங்கு / தொ.பே.இல : .......................................

.......................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................

.......................................................................................

அனுப்பவேண்டிய முகவரி :

திருவிவிலியம் கற்போம் - 197
'தொண்டன்"
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

SUN FANCY HOUSE

PRIDE OF BATTICALOA

மட்டக்களப்பில் மிகப் பிரமாண்டமான காட்சிறை



ஆலயப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,
சமையலறை உபகரணங்கள்
மற்றும் பல பொருட்களும்
எங்களிடம் கிடைக்கும்!



அனைவருக்கும் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

#163, 171 Trinco Road, Batticaloa.065 2223092


fb.com/sunfancyhouse

# WHY STUDY AT HEADWAY?




Headway
School of Languages

#12, Thamaraikerny Road | Arasady | Batticaloa
065 492 4042 | 065 222 5612 | 070 334 4445


ST. JOSEPH
IRON WORKS
Experts in Roller Door /
Shutter with Remote,
All type of Steel Door,
Gates, Railings & Grills etc.
Steel Roof Fabrications
No. 30, Boundary Road,
Batticaloa.
T.P.: 065 2225068 (Off)
065 - 2225067 (Res.)
H.P.: 077 6156917


NADAA Civil Engineering Pvt Ltd.
Civil Engineer & General Contractor
R.M.C. Road Development Department
(ICTAD) Reg.No - C-2426
VAT Reg.No. : 602650669 - 7000
Proprietor & Director :
N.R. Pathmanathan (J.P)
(Civil Engineer)
Project Manager :
Eng. Lion. N.B. Ranjan
(Civil Engineer)
No. 26A,
Upstair's Road,
Batticaloa.
Tel: 065 2223446
Mobile : 0777805291
Fax : 065 2225558

*Best Compliments*

HONDA

# PATTERSON & SONS

Authorized dealer for Stafford Motor Co. (Pvt) Ltd.

No. : 290, Trincomalee Road,
Batticaloa,
SriLanka.

Mobile : 077 3222022



# Hirunika


Civil Engineering Construction &
Building Materials Supplier


Proprietor :
Mr. G. Juliyan Jeyapragash

Regd No. DS/EP/BR/07/05

# 300, Old Kalmunai Road,
Navatkudah, Batticaloa.

Tel : 077 8697105
065 2248328






உங்களுக்கும் எமது
நன்றிகள்

**Donation**

**From**

**Mr. A.A. David**

**Thandavanveli Parish**

## நன்றி நவில்கின்றோம்

பொன்விழாக் கொண்டாடும் தொண்டனோடு பயணித்த மதிப்புக்குரிய மறைமாநில ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, குருக்கள், துறவிகள், 'தொண்டன் குடும்பம்', எழுத்தாளர்கள், வாசகர்கள், விற்பனையாளர்கள், நலன் விரும்பிகள, விளம்பரங்களைத் தந்துதவிய அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

இன்னும் அதிகமாய்த் தொண்டாற்றி சற்றும் தளராமல் வைரவிழா வரைச் சென்று, பவழ விழாவில் கால்பதித்து, நூற்றாண்டைத் தொண்டன் தொட வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

நீயும் Village Vingnanee

# விலேஞ் விஞ்ஞானி



- அருட்பணி R. பிரசன்னா

என்ன செய்வது, எப்படி வாழ்வது, ஏன் இப்படி நடக்கிறது என்ற புரியாத கேள்விகளோடு விடைகளைத் தேடிக்கொண்டிருப்பவர்களில் நானும், நீங்களும் ஒருவராக இருக்கிறோம். எங்கு பார்த்தாலும் சுயநலம், ஏமாற்றம், வேஷம் போடும் தலைவர்கள். நம்பி ஏமாற்றுகின்ற உறவுகள், நடக்கும் என்று நம்பின நிகழ்வுகள் கொடுக்கும் வேதனைகள் எல்லாமே எம்மை அடித்து, காயப்படுத்தி, தலைகுனிய வைத்து நிமிர முடியாத அளவுக்கு ஏறி மிதித்து விடுகிறது. புரிந்து கொண்டு உதவி செய்ய யாருமே இல்லை என்ற நிலையில் சோர்ந்து விடுகின்றோம். ஆனால், இந்நிலையை மாற்றலாம். நானும் மற்றவனைப்போல சாதனைகளைச் செய்யலாம் என்று நினைத்தாலே போதும்....

**நீயும் தலை நிமிரலாம்.**

நான் இரண்டு முறை வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறேன் என்று தோமஸ் அல்வா எடிஸன் ஒருமுறை கூறினார்.

ஓர் அலுவலகத்தில் அவர் டெலிபோன் ஒபரேட்டராக வேலை செய்து கொண்டிருந்தபோது அந்த மெஷினிடம் அவருக்கு மிகவும் ஈடுபாடு வந்து விடவே அதையே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அதனால், வந்த செய்திகளை அனுப்புவதற்கு அவர் மறந்து விட்டார். அவ்வளவு தான், அவரை வேலையிலிருந்து தூக்கி விட்டார்கள்.

மறந்ததற்காக தொழிலை இழந்துபோனவர் எழுந்து நிற்க மறக்கவில்லை. அதுமாத்திரமல்ல, இன்னொரு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். வேலைக்குச் சேர்ந்தவருக்குக் காத்திருந்தது அதிர்ச்சி.

பழைய கால கட்டிடம் அது. எங்கு பார்த்தாலும் எலிகள். அவற்றின் அட்டகாசம் அவரால் பொறுக்க முடியாத அளவிற்குப் போனது. ஈக்களை அடித்துக் கொல்வது போல எலிகளைக் கொல்ல ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்தார்.

அவ்வளவு தான், அறை முழுவதும் கொலையுண்ட எலிகளின் துண்டுகள் சிதறிக் கிடந்தன. அறையைப் பார்த்தவர்கள் உடனே அவரை வேலையை விட்டு நீக்கி விட்டனர். ஆனால் மனம் தளராமல் தொடர்ந்தும் உழைத்தவர், உழைப்பின் பயனாக விஞ்ஞானியாக மாறினார்.

எப்போதும், எதனாலும் மனம் தளராதவர் எடிஸன்!

தலைநிமிர நினைத்தால் தடைகள்தான். நீயும் சோர்ந்து போகாமல் விடாமுயற்சியுடன் தடைகளைத் தாண்டுகிறபோது வெற்றி உனக்கே.

எழுந்திடு.... துணிந்து செல்...!
உன் வாழ்க்கையை மாற்று...!




ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

50/=

